Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 15 31-07-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 163

## குடும்ப அட்டை திருத்தம் கால எல்லை தளர்வு

குடும்பப் பதிவு அட்டை திருத்தம் செய்வதற்கான கால எல்லை ஓகஸ்ட் 15ஆம் திகதியுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் பொதுமக்கள் குடும்ப அட்டை பெற்றுக்கொள்ளும் வசதி கருதி மறுஅறிவித்தல்வரை குடும்பப் பதிவு அட்டை திருத்கத்திற்கான கால எல்லை தளர்த்தப்பட்டுள்ளது என்பதனை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

# முப்படை அதிகாரிகளுடன் சந்திரிகா பேச்சுவார்த்தை

## பாரபட்சமற்று நடக்க கோரிக்கை

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்கா முப்படை உயர் அதிகாரிகளையும், பொலிஸ் மா அதிபரையும் சந்தித்து தனித்தனி பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தோடு, இச் சந்திப்பின்போது ஆயுதப்படையினர் பாரபட்சமற்ற முறையில் நடந்துகொள்ளவேண்டும் எனவும் கோரப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் றோஸ் மீட் பிளேஸ் இல்லத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளதாகவும் இதில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.மு. ஜயரட்னவும், சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா ஆகியோரும் கலந்து கொண்டதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

முதல் சந்திப்பில் பொலிஸ் மா அதிபரும் மேலும் இரு பொலிஸ்அதிகாரிகளும்கலந்து கொண்டதாகவும் இராணுவ தரப்பில் இராணுவ தலைமை அலுவலக அதிகாரி தலைமையில் இரண்டு இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது. மேலும் கடற்படை, விமானப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நரோமா பயணிகளுக்கு 6 மணிநேர கடும் சோதனை

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பலில் நேற்று வந்த பயணிகள், நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து கடற்படையினரால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் தொடர்ச்சியாக ஆறு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நோயாளிகளாகச் சென்று சிகிச்சை பெற்றவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், அரச ஊழியர்களும் நேற்றுக் காலை நரோமா கப்பலில் வந்து சேர்ந்தபோது காங்கேசன் துறை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி கப்பல் சேவை தடங்கல்கள் நீங்கின

### நாளை றுகுணு புறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான கப்பல் சேவை சீரடைந்துள்ளது. நாளை திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து றுகுணு கப்பல் புறப்பட்டு வருவதற்கு ஆயத்தமாகியிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

றுகுணு கப்பல் நாளை உரவகைகளை ஏற்றிக் கொண்டு வருவதை அடுத்து மாகோர், கோமாரி கப்பல்களில் கொழும்பு துறைமுகத்தில் வைத்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் அனுசரணையுடன் இனப்பிரச்சினை தீர்க்க முயல்வேன்

### கடுகண்ணாவையில் காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

இந்தியாவின் ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினைக்கு

தல் பிரசாரத்தில் ஈடுபட்ட வேளையில் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

றது- நாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது-

ராணுவத்தால் பாதிக்கப்பட்டோருக்கு

## இழப்பீட்டு தொகை வழங்க

175-வது ஆண்டு நிறைவு விழா

## யாழ்.மத்தியகல்லூரிக்கு தலைவரின் வாழ்த்து



இன்று 175-வது ஆண்டு நிறைவு நாளை கொண்டாடும் யாழ். மத்திய கல்லூரிக்கு தலைவர் பிரபாகரன் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அச் செய்தியில்,

நீண்டதொரு வரலாற்றையும், நிலையான கல்விப் பாரம்பரியத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது 175-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தக் காலத்திலிருந்தே தமிழ் மண்ணில் அறிவு விளக்கு ஏற்றிவைத்து, தமிழரின் தேசிய விழிப்பிற்கு வெளிச்சம் காட்டிவரும் பழம்பெரும் கல்விக் கூடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முக்கிய இடத்தை வகிக்கிறது. கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டு காலம்வரை கல்விப் பணிபுரிந்து, எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இந்தக் கல்லூரி ஆற்றிய அருந்தொண்டு பாராட்டுதற்குரியது.

தமிழீழக் கல்வித் துறையின் தூண்களாக நிற்பவவை கல்லூரிகள். இந்தக் கல்லூரிகளின் ஆதார பலத்தில் தான் எமது இளம் சமூகத்தின் கல்விவாழ்வு தங்கி

## இழப்பீட்டு தொகை வழங்க அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குரிய நிதி வழங்க அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதனால் மேற்படி மக்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இக் கொடுப்பனவுகளுக்
(6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கடமை புரிய யாழ். அரச அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தேர்தல் நடவடிக்கைகளில் பங்குபற்றவும் தேர்தல் கடமைகள் புரியவும் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பான தமது நிலைப்பாடு குறித்து அரச அதிபர் தேர்தல் ஆணையாளரிடமே தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தேர்தல் ஆணையாளரும் அரச அதிபரும் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தினர்
(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிபர் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதி திரு. டி.பி. விஜேதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்தவிருந்தார். நேற்று மாலை நடைபெற இருந்த இச்சந்திப்பின் போது யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து யாழ். அரச அதிபர் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூற இருந்தார்.

அதேவேளை யாழ். குடாநாட்டின் தேர்தல் நிலைமைகள் குறித்து ஜனாதிபதி அரச அதிபரிடம் கேட்டறிந்து கொள்வார் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.

## வவுனியாரயில்நிலையத்தில் கைக்குண்டு வெடிப்பு

### ஐ. தே. க. ஆதரவாளர், பொலிசார் காயம்

(வவுனியா)

வவுனியா ரயில் நிலைய மருகே நேற்று முன்தினம் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் அங்கு நின்ற மூன்று பொலிசாரும் இரு பொது மக்களும் காயமடைந்தனர். குண்டுவெடிப்பிற்கான காரணம் எதுவும் உடனடியாக அறியப்படவில்லை.

இவ்வழியாக சென்ற வாகனம் ஒன்றிலிருந்து இக்குண்டு வீசப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பலத்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் குண்டுகள் கிடக்கின்றனவா என பொலி
(6ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காணவும், வருடாந்தம் பெருமளவு பணம் விரயத்துடன் வடக்கு - கிழக்கு பகுதியில் நடைபெறும் யுத்தத்திற்கு முடிவு காணவும் என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுவேன். இவ்வாறு பிலிமத்தலாவ, கடுகண்ணாவ பகுதிகளில் தேர்

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

(கொழும்பு)

அரசசேவையில் எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இப்பரீட்சைகள் ஆகஸ்ட் 25, 27ஆம் திகதிகளில் நடைபெறவிருந்தது. புதிய திகதிகள் பற்றி பரீட்சைத் திணைக்களம் பின்னர் அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளையில் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தலைமைத்துவத்தின் கீழ் ஐ தே. க. மட்டுமே வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணும் சக்தி வாய்ந்தது- வடக்கு - கிழக்கு பகுதியில் இனப்பிரச்சினையே இன்றைய அபிவிருத்திக்கு பெரும் தடையாக இருக்கி

சுறுத்தலாக உள்ளது-

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு அல்லது சமாதானம், அமைதி என்பவற்றை நிலைநாட்டுவதற்கு ஜனாதிபதி டி-பி- விஜேதுங்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தமது நிபந்தனையற்ற முழுமையான ஆதரவு கிடைக்கும் என்றும், இவ்வகையிலேயே முன்னாள்
(6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிவடைந்ததும் வன்முறைகள் நிகழாது

### வர்த்தகரிடம் சு.க. வேட்பாளர் உறுதி

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்ததும் வன்முறைகள் நிகழும் என எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவ்வாறான சூழ்நிலை ஏற்பட பொதுஜன ஐக்கிய முன்னணி அனுமதியாது என சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான கிங்ஸ்லி விக்கிரமரட்ன தம்மைச் சந்தித்த கொழும்புவாழ் வர்த்தக பிரமுகர்களிடம் கூறியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி வன்முறைகளுக்கு இடமளியாது பொ. ஐ. மு. இனரால் அமைக்கப்பட்டிருக்கும் தேர்தல் கமிட்டி, தேர்தல் முடிந்
(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தொடர்ந்தும் போர்க்களமாகவே உள்ளது

### தேர்தல் களம் இருப்பதாக தெரியவில்லை வெரித்தாஸ்

மட்டக்களப்பு மாவட்டம் தேர்தல் களம்போல அல்லாது தொடர்ந்தும் போர்க்களமாகவே இருப்பதாக வெரித்தாஸ் வானொலி விபரித்துள்ளது,

மட்டக்களப்பு வாவியில் மீன்கள் பாடுகின்றன ஆனால் வாக்காளர்கள் அழுகின்றனர் என்ற தலைப்பில் வெரித்தாஸ் வானொலி ஒலிபரப்பிய உண்மையின் எண்ணங்கள் நிகழ்ச்சியில் அது மேலும் குறிப்பிடுகையில்

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் மட்டக்களப்பு நகாப் பகுதிகளிலிருந்து மட்டும் சுமார் ஏழாயிரம் பேர் காணாமற்போயிருக்கின்றனர் இதனைச் சராசரியாக எடுத்துப் பார்த்தால் முப்பது குடும்பங்களில் ஒருவர் காணாமல் போயிருப்பதைக் காணலாம் அத்துடன் மிகக் கடுமையான அளவில் மனித உரிமைகள் கொடுமைகள் நிலவுகின்றன
(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.அதிகாரிகள் பார்வையிட்டனர்

ஐ. நா, தொண்டர் பிரிவின் அதிகாரிகள் நேற்று பளை மருத்துவ மனையை பார்வையிட்டனர். இவர்கள் இன்று யாழ் போதனா மருத்துவ மனையையும் புத்தூர் மெதடிஸ்த மருத்துவ மனையையும் பார்வையிடவுள்ளார்கள். (சி)

## இருவர் காயம்

பூநகரி மட்டுவில் நாடு பகுதியில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற மோதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் காயமடைந்துள்ளனர் இவ்வாறு சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது

கல்லூரிகள். இந்தக் கல்லூரிகளின் ஆதார பலத்தில் தான் எமது இளம் சமூகத்தின் கல்விவாழ்வு தங்கி நிற்கிறது. கல்லூரிகள் வளர்ச்சிபெற்று திறம்படச் செயலாற்றினால் கல்வித்துறை மேம்பாடு காணும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது கல்விப் பணியைத் தொடர்ந்து தமிழீழ தேசத்தின் உயர்ச்சிக்கு உழைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மத்திய கல்லூரியின் 175வது ஆண்டுநிறைவுவிழா

பழைய மாணவர் சங்கம் நடத்தும் யாழ். மத்திய கல்லூரியின் 175-வது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய நிகழ்வில் 175-வது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடு நடைபெறவுள்ளது.

மேலும் கல்லூரிப் பெயர் வளைவுத் திரைநீக்கம், 175 ஆவது ஆண்டு நிறைவு மண்டப அடிக்கல் நாட்டல், சரஸ்வதி சிலை மேடை திரைநீக்கம் என்பன இடம்பெறவுள்ளன-

### அமைச்சர் தலைமையிலான

## குண்டரின் தாக்குதலுக்கு எதிரணி ஆதரவாளர் பலி

(கொழும்பு)

அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி முன்னிலையில் தாக்கப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் நேற்று அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மரணமானார்

இயல அல்வெல்ல எனும் இடத்தைச் சேர்ந்த ஆர் ஏ. டி. பியசேன (46) எனும் இவரை அமைச்சர் முதலில் தாக்கியதாகவும் பின்னர் ஐ. தே. க. குண்டர்கள் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த இவருக்கு அருகிலுள்ள ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சையளிக்க முற்பட்டதாகவும். ஆனால் அமைச்சர் குழுவினரின் மிரட்டல்களால் அது பயனளிக்காது போகவே அனுராதபுர ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## நாளைய மாணவர் அரங்கில்

A/Lபரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டலுடன் தாவரவியல், தமிழ், பொருளியல் மற்றும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டியும் வெளிவருகின்றன,

## பாடசாலை செப்டெம்பர் 5இல்

அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் மூன்றாம் தவணைக்காக செப்டெம்பர் 2-ம் திகதி திறக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததும், ஆயினும் அவை 5-ம் திகதியே திறக்கப்படும் என்று கல்வி அமைச்சு கடந்த புதன் கிழமை அறிவித்துள்ளது

# வரி விளம்பரம்

## மிருதங்கம்

மிருதங்க வகுப்புக்களும் நடைபெறுகின்றன. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். கைவசம் புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் றோட்-பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (8937)

## விற்பனைக்குண்டு

கறுப்புப் பேட்டுக்குஞ்சுகள் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பதி மானிப்பாய் (8963)

## விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 6 பரப்புக்காணியும், 5 அறையும் வீடு சேர்ந்த கிணறு, பயன் தரும் மா, பலா, தென்னை, தேசி, நிந்தமாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சி. ஏகாம்பரநாதன் (கிளாக்கர்) மேல்மாடி கண்டி வீதி, கொடிகாமம். (சி-9967)

## விற்பனைக்குண்டு

அலுஸ்ரேசன் நாய்க்குட்டி ஆண் (நாலுமாதம்) நிறம் கறுப்பு விற்பனைக்குண்டு தொடர்பு விஜி 125 ஐயனார் கோவில்வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (8945)

## கண்டெடுப்பு

சுதிராகமணி கந்தையா, தங்கம் கந்தையா ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# வடக்கு-கிழக்கு இணைப்பு கோருவதில் என்ன தவறு

### நவசமசமாஜக் கட்சி அறிக்கை

(கொழும்பு)

வடக்கையும் - கிழக்கையும் இணைத்து ஒரு சமஷ்டி முறையை உண்டாக்கினால் அது இறுதியில் ஒரு தனி நாட்டிற்கு வழிவகுத்துவிடும் என சிங்கள ஆரச்சக்க சங்விதானய (எஸ். ஏ. எஸ்) கூறுகிறது. 1950களில் சமஷ்டிக்கோட்பாடு என்பது பிரிவினை நஞ்சு என்ற விடயம் சிங்கள மக்கள் மனதில் ஊட்டப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வதியும் பகுதியாக வடக்கு கிழக்கு விளங்குகின்றது. எனவே வடக்கு - கிழக்கு ஓர் இணைந்த பிரதேசமாக இருக்க வேண்டுமெனக் கோருவதில் என்ன தவறு? இவ்வாறு நவசமசமாசக் கட்சி விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு கிழக்கு இணைப்பு எஸ். ஏ. எஸ் அமைப்பிற்கும் அதனை ஒத்தவர்களுக்கும் ஜீரணிக்க முடியாத கசப்பான விடயம் என்றால் அதுதான் ஈழக் கோரிக்கைக்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது எஸ் ஏ. எஸ் சின் விடாமுயற்சி காரணமாக இன்று பிரகடனபடுத்தாத ஈழம் ஒன்று வடக்கு கிழக்கில் ஏற்பட்டு விட்டதை எஸ் ஏ. எஸ் பார்க்க மறுப்பது வேறுவிடயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மூலிகை கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் சித்த மருத்துவப் பிரிவு சித்த மருத்துவ மூலிகைக் கண்காட்சி ஒன்றை நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தில் நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் கவனித்து வருகிறது. (24)

## பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தில் பயிலும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொதுக் கலைத் தேர்வு மீள்பரீட்சைகள் ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், பரீட்சைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் பேராதனை பல்கலைக்கழகத்தின்யாழ்ப்பாண பல்கலைக்கழகஇணைப்பாளர் எம் எச். எம். காஸீதீன் கூறியுள்ளார்


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கணிதவியலிலும் புள்ளி விவரவியலிலும் உதவி விரிவுரையாளர் பதவிக்கான 1994 ஜூன் 2ஆம் தேதிய விளம்பரத்திற்கு மேலதிகமாக, இப்பதவிக்கான விண்ணப்ப முடிவு தேதி 1994 ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-07-27

(சி-10011)


# குடியிருப்பாளர்கள் பதிவு; கொழும்பில் தமிழர் குழப்பம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு;பொலிஸ் புறக்கணிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும், புறநகர் பகுதியிலும் வாடகைக்கு குடியிருக்கும் தமிழர்கள் மீண்டும் ஒரு தடவை தமது பெயரை பொலிஸ் நிலையங்களில் பதிய வேண்டுமா என்பது புரியாமல் குழப்ப நிலைக்குள்ளாகியுள்ளனர்.

ஒரு தடவை பதிந்தவர்கள் மீள பதிய வேண்டியதில்லை என பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது. பொலிசார் தமிழர்களை மீண்டும் பதிவு செய்யுமாறு கோரியுள்ளனர். இதனால் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் பெரும்பாலான தமிழர்கள் தமது வீட்டு உரிமையாளர் மூலம் பொலிசில் ஏற்கனவே பெயர், விபரங்களை பதிவு செய்துள்ளனர். இதற்கு அத்தாட்சியாக பொலிஸ் பதிவின் அடித்துண்டு பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஒப்பமிடப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ஆனால் இந்த பதிவை ஏற்க இப்போது பொலிசார் மறுக்கின்றனராம். கொழும்பு சோதனை நிலைகளிலும் படையினர் இந்த பதிவை ஏற்க மறுக்கின்றனர்.

புதிய பெரியளவிலான படிவம் நிரப்பப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டு அதன் பிரதியை தம்முடன் வைத்திருக்க வேண்டும் என தமிழ் குடியிருப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## திட்டமிட்டபடி நடக்குமா?

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமா? என்ற சந்தேகம் தற்போது கொழும்பிலுள்ள புத்திஜீவிகள் மட்டத்தில் நிலவி வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ள அதேவேளையில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் மந்த நிலை ஏற்பட்டு வருகிறது.

இதனையடுத்தே இச்சந்தேகம் எழுந்துள்ளதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் அத்தியட்சகர் தேர்தலில் போட்டி

கிழக்கு பிராந்திய பாதுகாப்பு தொடர்பதிகாரியாக இருந்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜீது ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக, பதவியை ராஜினாமா செய்துள்ளதை அடுத்து அவரின் இடத்துக்கு பொலிஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரே கிழக்கு பிராந்திய பாதுகாப்பு தொடர்பதிகாரியாகவும், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் பணிபுரிவார்.

## தொண்டாவின் செயல் தேர்தல் விதிகளை மீறியது

### நடேசன் தெரிவிப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ-தொண்டமான் தேர்தல் விதிகளை மீறியுள்ளார் என ஜனநாயக தோட்ட தொழிலாளர் சங்கத்தலைவர் எஸ் நடேசன் தெரிவித்துள்ளார்

நேற்று மாலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்படி கருத்தை தெரிவித்த அவர் தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் லயன்களுக்கான உரிமைப்பத்திரம் தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் இது தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்படும் நடவடிக்கையெனவும் தெரிவித்தார்.


**SHORT-TERM COUNSELING COURSE IN ENGLISH (Week - End)**

The Course begins on Saturday October 1, 1994 at THODARPAHAM, 657/1, Hospital Road, Jaffna.

The last date to receive application is on August 31, 1994 Please get your applications at Thodarpaham on the following days: Monday, Wednesday, Friday and Sunday from 9 am-1pm

A basic fee will be charged for the course A working knowledge in English is a requirement. The number will be limited.

Director,
Thodarpaham,
657/1, Hospital Road,
Jaffna.

(8967)



**நினைவு கூருகின்றோம்...**

**31-07-1994..இ**

1987-ம் ஆண்டு களுத்துறை தோட்டங்களில் சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட இனப்படுகொலை நடவடிக்கைகளின் போது உயிர் இழந்த 09 தமிழர்கள்,

1988-ம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் இந்தியப்படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

**காந்தன்** (கந்தப்பெருமாள் ஜெபகாந்தன் - பாலையூற்று-திருமலை)

திருமலை-குச்சவெளி, பேராற்றுப் பகுதியில் இந்தியப்படையின் மிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய,

**மனோகரன்** (மாரிமுத்து இராமநாதன்-குச்சவெளி-திருமலை)

இதே தினம் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட, உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி,

1990-ம் ஆண்டு பலாலியில் எதிர்பாராதவிதமாக எறிகணை வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**2 ம் லெப்.சிவமதி** (பவானி மனோகரநாதன் - கிண்ணியா-திருமலை)

மன்னார்-10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.கேடில்ஸ்** (மிக்கேஸ் தேவதாஸ்-அச்சங்குளம், நானாட்டான்-மன்னார்)



**26-வது பிறந்தநாள் நினைவலைகள்**

31 - 07 - 1994





**தேவை**

நாசனல் (National) இனத்தைச் சேர்ந்த
மொடல் இல:- J 1, J 10!,
(Model No.) L 18, L 15, F 70
வீடியோ டெக் இருப்பின் உடன்



# கப்டன் கஸ்தூரி

## (வசந்தி கணேசன்)

கப்டன் கஸ்தூரி
சிறகை எடுத்து உயரப் பறந்த
சிட்டே!
நீ உயர உயரப் பறந்தாய்
மகிழ்ந்தோம்
ஒருநாள் இதயத்தில் இடி இறங்கியது
இனி எம்வாசல் சிலிர்க்க வரமாட்டாய்
என்று யாரோ வந்து கூறியது நினைவு
இன்று உனக்கு பிறந்தநாள்
உன்னை நேற்று மறந்திருந்தாலல்லவா
புதிதாக இன்று நினைப்பதற்கு
நீதானே எங்கள் முற்றத்தில்
பார்க்கும் இடமெல்லாம் படர்ந்து கிடக்கின்றாய்
தாயகத்துக்கு உயிர்ப்பூவை
சமர்ப்பித்தவளே
இன்றெமது கனவிலாவது
இரவு வருக .
வாழ்த்துக்கள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (8981) - குடும்பத்தினர்

---

தொடர்பு கொள்ளவும்
வி. இல. 343 பே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9999)

---

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

தட்டெழுத்தாளர் : 305 / 15
வெற்றிடம் : 01

மேற்படி பதவி பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றிடமாக உள்ளது. தகுதியான விண்ணப்பகாரரர் சொந்த எழுத்து மூலமாக விண்ணப்பப் படிவங்களை '' பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், மின்தறிஆலை, சங்கானை '' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ 1994 - 08 - 15 ஆம் திகதி மாலை 4. 00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சம்பளத் திட்டம் 730 — 1055 / 20 x 10 — 25 x 5

இத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய சகல படிகளும் வழங்கப்படும்.

வயது : 18 — 40 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விதிவிலக்களிக்கப்பட்டு உள்ளது)

தகைமை : க. பொ. த சாதாரண தரத்தில் சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிலான சித்தியும், சிங்கள / தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களும்.

குறிப்பு : ஆங்கில தட்டெழுத்து பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

(சி-10012)

---

(குளம், நானாட்டான்-மன்னார்)

**பொக்சன்** (வேலு சிவகுமார்-தண்ணீர்த்தாங்கியடி, முருங்கன்-மன்னார்)

**உரியவன்** (அப்பையா காசிப்பிள்ளை-வெட்டுக்காடு, பூநகரி-மன்னார்)

**2-ம் லெப். உதயகுமார்** (துரைராசா அன்ரன் சுதாகரன்-குருநகர்-யாழ்)

அம்பாறை-கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன பொத்துவிலைச் சேர்ந்த 14 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பெண் உட்பட கரடியனாறு கித்துல் பகுதியைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

கல்வியங்காடு-முத்திரைச் சந்தைப் பகுதிகளில் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**செபமாலை** (அலெக்சாண்டர் றூபன் குரூஸ் மெக்சி- 3-ம் வட்டாரம், பேசாலை-மன்னார்)

**அன்பு** (யாக்கோப் அல்டீன் ஜோஜ்-உயரப்புலம், ஆனைக்கோட்டை-யாழ்)

இதே நடவடிக்கையின் போது பளை-மாசாரில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**துணைப்படை வீரர் கண்ணன்** (நல்லையா பகீரதன்-வண்ணாங்கேணி-பளை)

1993-ம் ஆண்டு மட்டு-கும்புறுமூலை, வெம்பி என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கவிவாணன் ஜோன்** (கணேசன் ரவிக்குமார்-கிரான்-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9994)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# இரசாயனவியல் A/L

## 1994 க. பொ. த. (உ/த) மாணவருக்கு வழிகாட்டல் -II

கடந்தமுறை இந்தப் பகுதியிலே எழுதியபோது பல்தேர்வு வினாக்கட்கு ஒரு வழிகாட்டல் உங்கட்கு வழங்கப்பட்டது.

இம்முறை இரசாயனவியல் பகுதி II இற்கான ஒரு வழிகாட்டல் உங்கட்கு தரப்படுகிறது.

பரீட்சையில் இரசாயனவியலை சந்திப்பதற்கு இன்னும் சில நாட்களே உங்களிற்கு இருக்கின்றன. இனி நீங்கள் கைக்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை முதலில் நோக்குவோம்.

முதலாவதாக ஒரு விடயத்தினை வலியுறுத்த விரும்புகின்றேன். கூறவேண்டிய விடயத்தினை சுருக்கமாக, தெளிவாக, ஒழுங்காக எழுதுங்கள். உங்கள் எழுத்து உறுப்பாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. துப்புரவாக எழுதுங்கள். அநாவசியமாக எழுதுவதனைத் தவிருங்கள். பலர் தமக்கு தெரியுமோ தெரியாதோ, தமக்குத் தெரிந்தவற்றை எல்லாம் எழுதித் தள்ளிவிடுவர். இது திருத்துனர்க்கு ஒரு சோதனை போல அமைந்துவிடுகிறது.

உதாரணத்திற்கு பின்வரும் கேள்வியை எடுத்துக் கொள்வோம்.

தொடுகை முறை சல்பூரிக்கமில தயாரிப்பின் பௌதிக இரசாயன தத்துவங்களை விளக்குக.

பலரது விடைத்தாள்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் கேள்வியின் உள்ளடக்கத்தினைக் கவனியாது தயாரிப்புமுறைகள், மூலப்பொருள் பற்றிய விபரங்களை எழுதித் தள்ளிவிடுவார்கள். இதனால் தமது நேரத்தினை விரயமாக்குகிறார்கள். திருத்துனரின் மனநிலையினை பாதிக்கிறார்கள், இறுதியில் என்ன? ''வினாத்தாள் இலகுவானது, ஆனால் விடையெழுத நேரம் போதாது''. இதுதான் அவர்களின் கூற்றாயிருக்கும். இதன் விளைவு என்ன?

''சத்திரசிகிச்சை வெற்றி; ஆனால் நோயாளி இறந்துவிட்டார்'' இதுதான் நிகழ்வு.

எனவே இவ்வினாவிற்கு நீங்கள் விடையளிக்கும் போது சம்பந்தப்படும் முக்கிய தாக்கங்கள் குறிப்பாக $2SO_2 + O_2 \rightleftharpoons 2SO_3$

இதில் (i) பயன்படும் வெப்பநிலை

புறவெப்பத் தாக்கம். இலிற்சற்றிலியரின் தத்துவப்படி உயர் வெப்பநிலை விளைவை குறைக்கும், அல்லதுபிற்தாக்க வீதத்தினை சாதகமாக்கும்.

ஆனால் தாழ் வெப்பநிலையில் மூலக்கூறுகள் ஏவற் சக்தியிற்கு சமமான அல்லது அதனை விடக் கூடிய நிலையினை கொண்டிராமையினால் தாக்கம் மந்தம்.

ஆகவே மிதமான உயர் வெப்பநிலை 450°C. இது போலவே

(ii) செறிவு (iii) அமுக்கம் பற்றிய விளக்கங்கள் $SO_3$ யினைஏன் நீரில் கரைக்காது செறி $H_2SO_4$-இல் கரைக்கவேண்டும்? தேவையான செறிவுள்ள $H_2SO_4$ இனை எவ்வாறு தயாரிக்கலாம்?

மேற்கண்ட விடயங்கள் போதுமானவை. இரண்டாவதாக நாம் கேள்வியிற்கு விடையளிக்கும் ஒழுங்களைப் பார்ப்போம்.

வினாக்கட்கு இலக்க ஒழுங்கில்தான் கட்டாயம் விடையளிக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் ஒரே வினாவின் பகுதிகட்கு வெவ்வேறு இடங்களில் விடை எழுத வேண்டாம்.

உதாரணமாக:-

வினா 5(a), பின் வினா 7(b), திரும்ப வினா 5(b) இப்படி எழுத வேண்டாம். வினா 5இன் பகுதிகளை பூரணமாக எழுத முடியாவிடின் உமக்கு தெரிந்த இலகுவான பகுதிகட்கு முதலில் விடை எழுதிவிட்டு பின்னர் எழுதலாம் என கருதும் பகுதி மீளப் பார்க்க உதவும். எழுதிய வினாக்களின் ஒழுங்கினை விடைத்தாளில் முன்பக்கத்தில் உரிய இடத்தில் குறித்து விடுங்கள்,

உமக்கு மிக இலகுவாக தெரிந்த வினாக்கட்கு முதலில் விடையெழுதுங்கள். இது பரீட்சைக்கான மனோநிலையினை உற்சாகப் படுத்தும். எனவே வினாத்தாளை கையில் வாங்கியவுடன் எல்லா வினாக்களையும் மேலெழுந்தவாரியாக சுமார் 5-10 நிமிடங்களுக்கு பாருங்கள். பின் நீர் தெரிவு செய்ய வேண்டிய ஒழுங்கினை மனதில் பதியுங்கள். மனநிலை பதற்றத்தில் இருந்து மீள ஒரு நிமிடம் அமைதியாக சிந்தியுங்கள்.

பின் விடை எழுதஆரம்பியுங்கள் இங்கேதான். கவனமாக இருத்தல் வேண்டும். உங்கட்கு தெரிந்த பகுதி என்பதற்காக முன் சொன்ன பிழைகளை விட்டுவிடாதீர்கள். அதாவது விரிவாக எழுதித்தள்ள வேண்டாம்.

தற்செயலாக நீர் தேர்ந்தெடுத்த வினாவிற்கு விடையளிக்கையில் இடையில் ஏதாவது தடங்கல், உதாரணமாக அப்பகுதி உமக்கு மறந்துவிட்டது என்போம். அதற்காக கடுமையாக யோசித்து மனச்சஞ்சலமடையாதீர்கள். அதற்கு இடத்தை ஒதுக்கிவைத்து விட்டு அப்பால் தொடருங்கள்.

கணிப்புகளாயின் படிமுறைகள், அலகுகள் மிகமுக்கியம். கூடியளவுக்கு இறுதியிலே சுருக்கி விடையெழுதுங்கள். சுருக்கும்போது தானங்களை வெட்டுவதனை வேறு தாள்களில் செய்துதேவையானால் பின் இணைத்துவிடுங்கள். உமது தாளை ஒழுங்கற்றதாகச் செய்ய வேண்டாம்.

உதாரணமாக;-

வினா: 47°Cயில் 1atmஇல் 4·1 இலீகுடுவையிலுள்ள $O_2$ வாயுவின் திணிவு யாது?

$O_2$ இலட்சிய நடத்தை என்க.

எவ்வாறு விடையெழுத வேண்டும்?

மிக அடிப்படையான சமன்பாட்டிலிருந்து ஆரம்பியுங்கள்

$$PV = nRT$$

திணிவு கேட்கப்படுவதால் அதனை பெறத்தக்கதாக சமன்பாட்டினை மாற்றுக.

$$PV = \frac{w}{M} RT$$

$$W = \frac{PVM}{RT}$$

இனி தரப்பட்ட பெறுமானங்களை அலகுகளுடன் எழுதுங்கள்

$$W = \frac{1atm \times 4 \cdot 1l \times 32gmol^{-1}}{0\ 082atm\ .l.mol^{-1}k^{-1} \times 320k}$$

$$= 5.0g$$

இதுபோதுமானது. இடைப்பட்ட படிகளை வேறு தாளில் அல்லது வேறு இடத்தில் எழுதிச் சுருக்குக.

பிறிதொரு விடயத்தினையும் கவனியுங்கள்.

தேவையற்ற முறையில் எழுதிச் சுருக்கிச் செய்தல் உங்கட்கு நேரத்தினை விரயமாக்கும். பொதுவாக எந்த வினாவும் இலகுவில் சுருக்கத்தக்கதாகவே தருவார்கள். அதனை கவனமாகப் பார்த்துச் செய்யுங்கள்.

உதாரணத்திற்கு பிறிதொரு வினா

''298K யில் ஒரு மூல மென்னமிலம் HA யின் அயனாக்கல் மாறிலி $1.5 \times 10^{-5}$ mol $dm^{-3}$ நீரின் அயன் பெருக்கம் $1 \times 10^{-14}$ $mol^2$ $dm^{-6}$ ஆயின் இவ் வெப்பநிலையில் HA யின் 0.40 mol $dm^{-3}$ கரைசலின் pOH இனை காண்க.

விடை இவ்வாறு எழுத வேண்டும்.

மனதில் வைத்துக் கொள்ளுங்கள்

$$POH = - மட_{10} [OH^-]$$

நாம் முதலில் அமிலத்தில் $H_3^+O$ (நீர்) அயன் செறிவைக் காண வேண்டும். [தயவு செய்து $H^+$ நீர் என்பதனை விட $H_3^+O$ என எழுதவும்]

$$HA_{(நீர்)} \rightleftharpoons H_3^+O_{(நீர்)} + A^-_{(நீர்)}$$

சமநிலையில் C (1-x) Cx Cx

$$Ka = \frac{[H_3^+O]\ [A^-]}{[HA]} = \frac{Cx\ Cx}{C(1-x)}$$

$$= \frac{Cx^2}{C} \quad ∴ x \text{ சிறிது}$$

* இங்கு x காண வேண்டாம் ஏனெனில் $H_3^+O$ செறிவு என்பது Cx ஆகும்.

$$∴ Cx = \sqrt{Ka.C}$$

$$= [H_3^+O]$$

$$∴ [OH^-] = \frac{1 \times 10^{-14} mol^2 dm^{-6}}{[H_3^+O] Mol\ dm^{-3}}$$

$$= \frac{1 \times 10^{-14}}{\sqrt{1.5 \times 10^{-5} \times 0.4}} mol\ dm^{-3}$$

$$= \frac{1 \times 10^{-14}}{\sqrt{0\ 6 \times 10^{-5}}} mol\ dm^{-3}$$

$$= \frac{1 \times 10^{-14}}{\sqrt{6 \times 10^{-6}}} mol\ dm^{-3}$$

$$= \sqrt{\tfrac{1}{6}} \times 10^{-11}\ mol\ dm^{-3}$$

இங்கு $\sqrt{6}^{11}$ இன் பெறுமானம் கண்டுநேரத்தினை விரயமாக்க வேண்டாம் ஏனெனில் மடக்கைப் பெறுமானம் தான் எமக்குத் தேவை.

$$∴ POH = - மட \sqrt{\tfrac{1}{6}} \times 10^{-11}$$

$$= 11 + \tfrac{1}{2} மட 6$$

இனி சுருக்குக. இது நேரத்தினை மீதப்படுத்த உதவும். இனி ஒவ்வொரு பகுதியாக சில எதிர்பார்ப்புகள் குறிப்புகளை தரலாம் என நம்புகிறேன்.

### பகுதி A:- அமைப்புக் கட்டுரை

இதில் முதலாம் வினா பொது இரசாயனத்திற்குரியது. மிக இலகுவாகவே எப்போதும் அமையும். அயனாக்க சக்தி, இலத்திரனிலையமைப்பு, பிணைப்புகள் சம்பந்தமாக இங்கு எதிர்பார்க்கலாம். பொதுவாக இப்பகுதி நீங்கள் முதலில் தேர்ந்து எடுக்கக் கூடியது.

வினா இல. 2:-

பொதுவாக இதன் பகுதிகளில்

i) எளிய கணிப்புடன் கூடிய கேள்வியொன்று அசேதன இரசாயனத்துடன் தொடர்புடையது. இங்கு சிறிது கவனமாக, சுருக்கமாக விடையளிக்க முயலுங்கள்.

ii) சமன்பாடு ஈடுசெய்ய நேரிடலாம்: ஒட்சியேற்ற எண்ணை பயன்படுத்தலாம் எனின் அது இலகுவானது ஆனால் விரிவான முறைகளைக் காட்ட வேண்டாம்.

iii) அசேதன பண்பறிபகுப்பு இங்கு உள்ளடக்கங்களில் கரைதிறன்கள், வெப்பபிரிகைகள் பற்றியதாக பொதுவாக அமையலாம்.

இப்பகுதியில்இம்முறை ''அரைவாழ்வுக் காலம்'' பற்றிய எளிய கணிப்புகளையும் அல்லது கரு இரசாயனச் சமன்பாடுகளையும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

வினா 3, 4 சேதன இரசாயனம்

இங்கு மாற்றீடுகள், வேறுபிருத்தல் கவனமாக செய்யப்பட வேண்டும். உமது பாடத்திட்டத்திற்கு அமைவாகவே கேட்கப்படும் ஆகவே அநாவசியமாக எங்கேயோ கேள்விப்பட்டதினை எல்லாம் எழுத வேண்டாம்.

பொதுவாக படிகூட்டல் மாற்றங்கள்:

இதற்கு (I) >C= O + RmgX

(ii) அல்டோல் ஒடுக்கல்

போன்றன அநேக சந்தர்ப்பங்களில் உதவலாம். அநேகமாக அரோமற்றிக்கு சேர்வைகளில் ஈரசோனியம் உப்பு ($C_6H_5N_2Cl$) தயாரிப்பு மூலம் செல்வதும் படிகூட்ட உதவும்.

தயவுசெய்து இப்பகுதியினை தெளிவாக எழுதுங்கள்.

### பகுதி II B - கட்டுரை

பௌதிக இரசாயனம் சம்பந்தமான பகுதி

இங்கு நீங்கள்

(i) வாயுக்கள்- குறிப்பாக $Pv = \frac{1}{3}mnc^{-2}$ இலிருந்து வாயுவிதிகளை உய்த்தறிதல்.

பகுதியமுக்கம் தொடர்பான கணிப்புகள்:

இலட்சிய - மெய் நடத்தைகளை எதிர்பார்க்கலாம்.

அவத்தைச் சமநிலை

(I) பங்கீட்டு விதி

(II) கொதிநீராவி காய்ச்சி வடிப்பு

(II) இரசாயனச் சமநிலை

Kp, Kc தொடர்பு. வெப்பநிலை, அமுக்கம் செறிவு சமநிலையினைபாதிப்பதனை காட்டும்சோதனைகள் எளிய கணிப்புகள்.

(III) அயன் சமநிலை
காட்டியின் வீச்சம்
உப்புகளின் நீர்ப்பகுப்பு
தாங்கற் தொழிற்பாட்டின் விளக்கம்
கரைதிறன் பெருக்கம் துணிதல், பயிற்சிகள் PH கணிப்பு

ச. தில்லைநாதன்
ஆசிரியர், சென்பற்றிக்ஸ் கல்லூரி

iii) இரசாயன இயக்கவியல்

மோதுகைக்கொள்கை, வெப்பநிலை பாதிப்பு

$H_2O_2$ / kI / $H_2SO_4$- தாக்கவீத தொடர்பான சோதனை

எளிய பயிற்சிகள்

(iv) $C^{12}$ காலம் குறித்தல்

(v) மின்னிரசாயனக் கலத்தின் குறியீடு, மின்னியக்கவிசை

மின்வாய்ச் சமநிலையைபாதித்தல், மின்வாய்த் தாக்கங்கள். இவற்றினை மேலோட்டமாக ஆயத்தப்படுத்திச் செல்லுங்கள்.

### பகுதி II C கட்டுரை

(i) கைத்தொழிற் தயாரிப்புகள்

$H_2SO_4$, NaOH எதிர்பார்க்கலாம்.

முக்கிய அம்சங்களை அட்டவணைப்படுத்துங்கள்

(ii) கண்ணாடி, சீமெந்து எதிர்பார்க்கலாம்.

(iii) கனிய மணல்

(iv) இறப்பர்பால் சேகரிப்பு, திரளச் செய்தல்

இவற்றினை ஓரளவு ஆயத்தப்படுத்திச் செல்லுங்கள். இறுதியாக ஒரு சில வார்த்தைகள்.


(i) பகுதி (B) இல் 2வினாக்களும், பகுதி C யில் 2 வினாக்களும் மட்டும் எழுதுங்கள்.

இடையே கூடுதலாக எழுதினால் அதனை நீக்கி விடுங்கள். ஏனெனில் கூடுதலாக விடையளித்தால் இறுதியாக எழுதியதுதான் நீக்கப்படும்.

(ii) உங்கள் மீது நம்பிக்கையினை வளருங்கள்.

## மாணவர் அரங்கு

தெரிந்த இலகுவான பகுதிகட்கு முதலில் விடை எழுதிவிட்டு பின்னர் எழுதலாம் என கருதும் பகுதிக்கு இடத்தை விட்டு மறு வினாவினை புதிய பக்கத்தில் எழுத ஆரம்பியுங்கள். இது நீர் எல்லா வினாவிற்கும் விடையெழுதி விட்டீரா என இறுதிநேரத்தில்



(ii) உங்கள் மீது நம்பிக்கையினை வளருங்கள். இரசாயன பாடம் எளிதானது. உமக்கு தெரிந்தவற்றினை ஒழுங்காக மனதில் பதித்து செல்லுங்கள், நிச்சயம் நீங்கள் நல்ல பெறுபேறு எடுப்பீர்கள்.

# விலங்கியல் A/L

## பரீட்சைக்குரிய வழிகாட்டல் முறைகள்

**தனபாலசிங்கம் கெங்காதரன்**
ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை

கடந்த வார கட்டுரைத் தொடரில் பல் தேர்வு வினாக்களுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது பற்றி ஆராய்ந்தோம். இக்கட்டுரைத் தொடரில் அமைப்புக் கட்டுரை வினாக்களிற்கும் கட்டுரை வினாக்களுக்கும் எவ்வாறு விடையளிப்பது என்பது பற்றி ஆராய்வோம்.

முதலில் அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் முறையை ஆராய்வோம். அமைப்புக் கட்டுரை வினாக்களில் கூடியளவு வினாக்கள் செய்முறைகளை அடிப்படையாக வைத்து வினவப்பட்டாலும் பாட அறிவைப் பரீட்சிக்கும் வினாக்களும் இப்பகுதியில் வெளிவருகின்றன. எனவே ஒரு மாணவன் தனது செய்முறை அறிவை விருத்தி செய்வதோடு பாட அறிவையும் தெளிவாகப் பெற்றிருந்தால் அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு விடையளிப்பது மிகச் சுலபமாகும்.

அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு அவ் வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டியிருப்பதால்பரீட்சகர்கள் இவ் வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளையே எதிர்பார்க்கின்றனர். எனவே இவ் வினாக்களுக்கு சுருக்கமாகவும் அதே வேளை கருத்துப் பொதிந்ததாகவும் மாணவர்கள் விடையளிக்கப் பழக வேண்டும். பல மாணவர்கள் தாங்கள் விரிவாகக் கற்றதை சுருக்கி விடையளிப்பதற்கு சிரமப்படுவதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இது மாணவர்களிடத்தில் காணப்படும் ஒரு பெருங் குறைபாடாகும். இதனை நிவர்த்தி செய்வதற்கு மாணவர்கள் கட்டாயமாக கடந்த காலங்களில் வெளிவந்த வினாக்களுக்கு விடையளித்து பின் அதற்குரிய புள்ளியிடும் திட்டங்களுடன் விடைகளை ஒப்பிட்டு திருத்தி சரியாக விடையளிக்கவேண்டும். இதே போல் வேறு அமைப்புக் கட்டுரை வினாக்களையும் மாணவர்கள் செய்து பழகி ஆசிரியரின் துணையுடன் தவறுகளைத் திருத்தி சரியாக விடையளித்து நன்கு பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். நன்கு பயிற்சி பெறாத மாணவர்கள் அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு சிறந்த முறையில் விடையளிப்பது சிரமம் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சில மாணவர்கள் அமைப்புக் கட்டுரை வினாத்தாளில் அவ்வினாவிற்கு விடையளிக்க விடப்பட்டிருக்கும் வரிகள் அனைத்தையும் நிரப்பவேண்டுமென்று முயற்சிக்கின்றனர். அது தவறான கணிப்பாகும். எல்லா வினாக்களுக்கும் அவ்வாறு வரிகள் நிரம்பும் என எதிர்பார்க்கமுடியாது. சில வேளைகளில் சரியான விடையளித்த பின்பும் வரிகள் நிரப்பப்படாது இருக்கலாம். இதையிட்டு நீங்கள் மனம் தளர வேண்டாம்.

உதாரணமாக ஒருவினாவைக் கருதுவோம்.

I) (A) i) மனித மண்டையோட்டின் நெற்றிப் பகுதியை ஆக்கும் என்பு யாது?
..................

ii) மனித முகத்தில்உள்ள அசையக் கூடிய என்பு யாது?
..................

iii) மேற் குறிப்பிட்ட என்பு மண்டையோட்டின் எவ் வென்புடன் மூட்டை ஏற்படுத்துகிறது.?
..................

iv) மேலே குறிப்பிட்ட மூட்டைப்பெயரிட்டு அது எத்தகைய மூட்டு எனவும் குறிப்பிடுக?
மூட்டு ...............
வகை ..................

v) மனிதனின் மண்டையோட்டின் அடிக்கல் என விபரிக்கப்படும் என்பு யாது?
......... .. ...

இவ் வினாவிற்குரிய விடைகளைக் கருதுவோம்;
i) நுதல் என்பு
ii) சிபுக என்பு [ கீழ்த் தாடை என்பு
iii) கடை நுதல் என்பு
iv) மூட்டு - கடை நுதல் சிபுக மூட்டு வகை- கும்மிழ்மூட்டு
v) ஆப்புப்போலி என்பு

மேலே குறிப்பிட்ட என்புகளை எழுதுவதற்கு வரியின் சிறுபகுதி போதும். எனவேவரி முழுவதையும்நிரப்பவேண்டும் என்று மாணவர்கள்நினைக்கக் கூடாது. சில சந்தர்ப்பங்களில் மேலுள்ள வினா போன்ற ஒரு வினாவிற்கு விடையளிக்க இரண்டு வரிகளும் விடப்பட்டிருக்கலாம். அதைப் பற்றி நீங்கள் மனம் தளர்வடையக் கூடாது.

மேலும் மாணவர்கள் சில அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு விடையளிப்பதற்கு விடப்பட்ட வரிகள் போதவில்லை எனக் குறிப்பிடுவதுண்டு. இதுவும் தவறாகும் ஏனெனில் அமைப்புக்கட்டுரை வினாக்களுக்குரிய விடைகளை அளிப்பதற்கு அங்கு விடப்பட்ட வரிகள் போதுமானவையாகும். எனவே மாணவன் தான் அதற்குள் விடையளிப்பதற்கேற்ற வகையில் தன்னை மாற்றியமைத்துக் கொள்ளல் வேண்டும். எந்த மாணவனும் வரிகளுக்கு மேலதிகமாக விடையளிக்க வேண்டும் என பரீட்சகர் எதிர்பார்ப்பதில்லை.

உதாரணமாக ஒன்றைக் குறிப்பிடவேண்டும். 1993 August அமைப்புக் கட்டுரை வினாத்தாளில் மனித ஈரலின் ஐந்து தொழில்களைக் குறிப்பிடுக என்று வினா அமைக்கப்பட்டபின் ஐந்து வரிகள் விடப்பட்டு கீழே பெரிய இடைவெளி விடப்பட்டிருந்தது. இவ் விடைவெளி விடப்பட்டது அமைப்புக் கட்டுரை வினாக்கள் முடிவடைந்ததாலேயே ஆகும். ஆனால் பல மாணவர்கள் அவ்விடைவெளியையும் தங்கள் விடைகளால் நிரப்பி ஈரலின் ஏராளமான தொழில்களைக் குறிப்பிட்டிருந்தனர். இது தவறான ஒரு செயல்முறையாகும். அத்துடன் இதன் காரணமாக மாணவர்கள் தமக்குரிய நேரத்தையும் வீணாக இழப்பதால் ஏனைய வினாக்களுக்கு விடையளிக்க முடியாமல் போகின்றது.

அமைப்புக்கட்டுரை வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்கும் போது விடும் வேறொரு தவறையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது ஒரு வினாவில் ஒரு இயல்பை மட்டும் குறிப்பிடுக என்று வினவப்பட்டால் சில மாணவர்கள் பல இயல்புகளைக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய இடங்களில் மாணவர்கள் சரியான இயல்பை மட்டும் குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய இயல்புகளைக் குறிப்பிட்டால் அவற்றில் ஒன்று பிழையாயின் நீங்கள் சரியாக எழுதிய விடைக்குரிய புள்ளிகளும் இல்லாமல் போகும் என்பதை கவனிக்க வேண்டும். இத்தகைய ஒரு நிலை 1991 (விசேட 1992) பரீட்சைக்குரிய மாணவர்களுக்கு ஏற்பட்டது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அத்தகைய ஒரு வினாவைக் கீழே கருதுவோம்.

கீழ் காணும் Phylam ஒவ்வொன்றையும் பிரித்தறிய உதவும் ஒவ்வொரு இயல்பினைத் தருக?
i) Coelenterata .........
ii) Platy helminthes....
iii) Annelida .. .....
iv) Arthropoda .........
v) Mollusca ........

இதற்குரிய விடையை கருதுவோம்.
i) இருபடை உடலமைப்பு / அழன் மொட்டுச் சிறைப்பை
ii) சுவாலைக்கலம்
iii) சிலிர்முள்
iv) மூட்டுக்களையுடைய அவயவம் / கைற்றின் புறத்தோல்
v) மென் மூடி / வறுகி தசைசெறிந்த பாதம்

மேற் குறிப்பிட்ட வினாவிற்குரிய புள்ளியிடும் திட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்ததை மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ''ஒன்று மட்டும் எழுதுதல் வேண்டும். பல எழுதியிருப்பின் எல்லாம் சரியாயின் மட்டுமே புள்ளி வழங்கப்பட வேண்டும்.''

மற்றும் சில அமைப்புக்கட்டுரை வினாக்களில் அங்கிகளின் புறவுருவங்களைக் குறிப்பிட்டு அவ்வுருவங்களுக்கு A B C D E.. எனப் பெயரிடப்பட்டிருக்கும். பின் வினாவில் ஆங்கில எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி இவ் வினாவிற்கு விடையளிக்க என குறிப்பிடப்பட்டிருக்கும். இத்தகைய வினாக்களுக்கு ஆங்கில எழுத்துக்களை மட்டுமே பயன் படுத்தி விடையளிக்க வேண்டும். இத்தகைய ஒரு வினா 1993 ஆகஸ்டில் வெளி வந்துள்ளது.

மற்றும் பாகுபாட்டியல், பெயரீடுகளை அடிப்படையாக வைத்து அமைக்கப்படும் அமைப்புக்கட்டுரை வினாக்களில் பாகுபாட்டுபிரிவுகள், பெயரீடுகளை எழுத்துப்பிழையின்றி எழுத மாணவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறு எழுத்துப் பிழைகள் ஏற்பட்டால் புள்ளிகள் வழங்கப்படாது என்பதைக் கவனிக்க வேண்டும்.

உதாரணமாக, மனிதனின் சர்வதேச ரீதியான பெயரை எழுதும்போது Homo Sapi-ens Sapiens என்று எழுதுதல் வேண்டும். இதில் ஒரு எழுத்துப்பிழை கூட ஏற்பட்டிருந்தால் உங்களுக்கு புள்ளிகள் கிடைக்காது. 1993 ஆகஸ்டில் பரீட்சை எடுத்த மாணவர்கள் பலர் Echinoderma-ta என்னும் Phylum ஐ சரியான முறையில் எழுதாததனால் புள்ளிகளை இழந்துள்ளனர்.

வரைவிலக்கணங்களாக சில வினாக்கள் கேட்கப்படுகையில் வசனத்தை கட்டாயம் முடித்து பூர்த்தியாக்க வேண்டும் என்று எண்ண வேண்டாம், வரிகளுக்கு ஏற்றவகையில் உங்கள் விடைகளை அமைத்தால் போதுமானது. உதாரணமாக ஒரு வினாவை கருதுவோம்.

வினா -(1) ஸ்திரியின் மாதவிடாய் வட்டம் என்பது யாது?

இதற்குரிய விடையை பின்வருமாறு அமைத்தால் போதும்.

விடை (1) பருவமடைந்த ஸ்திரியில் சூலகத்திலும் கருப்பை அகத்தோலிலும் ஏற்படும் வட்டரீதியான கட்டமைப்புத் தொழிற்பாட்டு மாற்றம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# விலங்கியல்

இவ் விடையின் இறுதியில் மாதவிடாய் வட்டம் எனப்படும் என்று வசனத்தை முடிக்க வேண்டியஅவசியமில்லை. வேறொரு விடயத்தை விளக்குவதற்காக கீழே 1991 (விசேட) 1992) பரீட்சையில் வெளிவந்த வினாவைக்கருதுவோம்.

(1) **Phylum protozoa** இல் காணப்படும் மூன்று பிரதான இடப் பெயர்ச்சிப் புன் அங்க வகைகளைக் குறிப்பிடுக?

(1) ........ 2)...... 3).......

(11) மேலே கூறிய புன்னங்க வகையையும் கொண்டுள்ள ஒவ்வொரு **Protozoa** கூட்டத்தினைப் பெயரிடுக?

1) ..... 2) ...... 3) ......

(111) **Protozoa** கூட்டங்களுள் எப்பிரதான கூட்டத்தில் இடப் பெயர்ச்சிப் புன்னங்கங்கள் எதுவும் காணப்படுவதில்லை?

..............................................

**IV) (III)** இல் பெயரிட்ட கூட்டத்தின் வாழ்க்கை முறை என்ன?

..............................................

**V) Protozoa** வின் எப்பிரதான உபபிரிவில் சுருங்கும் வெற்றிடங்கள் எதுவும் காணப்படுவதில்லை?

விடைகள் -

1) 1) போலிப்பாதம் 2) பிசிர் 3) சவுக்குமுளை

II 1) **Class Rhizopoda**
2) **Class cilil i o p h ora**
3) **Classmastigop h o r a**
iii) **Class Sporozoa**
iv) ஒட்டுண்ணி வாழ்க்கை
v) **Class Sporozoa**

இவ்வாறு வினா அமைக்கப்பட்டு விடை எழுதுகையில் முதலாம் வினாவில் இடப்பெயர்ச்சிப்புன்னங்கம் எழுதிய இலக்கத்தில் இரண்டாம் வினாவில் **Class** எழுதப்படல் வேண்டும். மாறிஎழுதின் புள்ளிகளை இழந்து விடுவீர்கள்.

எனவே மேற்கூறிய அறிவுரைகளை கவனத்தில் எடுத்து அமைப்புக்கட்டுரை வினாக்களுக்கு சிறந்த முறையில்விடையளிப்பீர்களாயின் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இனி கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் முறையை கவனிப்போம்.

கட்டுரை வகை வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பாட அறிவு திருப்திகரமாக இருத்தல் வேண்டும். அத்துடன் ஒழுங்குமுறையில் விடைகளை சமர்ப்பிக்கும் திறனும் பரீட்சகர் எதனை எதிர்பார்க்கின்றார் என்பதை அறிந்து அதற்கேற்றவகையில் விடையெழுதும் அளவை தீர்மானிக்கும் திறனும் மாணவனுக்கு இருத்தல் வேண்டும். பரீட்சகர் ஒரு வினாவுக்கு ஒன்றரை அல்லது இரண்டு பக்கங்களில் மாணவன் விடை எழுத வேண்டும் என எதிர்பார்க்கையில் சில மாணவர்கள் ஐந்து அல்லது ஆறுவரிகளை எழுதிவிட்டுதிருப்தியடைந்து விடுகின்றனர். அதேவேளை சில மாணவர்கள் அளவு தெரியாது நான்கு அல்லது ஐந்து பக்கங்களை எழுதி நேரத்தை வீணடிக்கின்றனர். எனவே கட்டுரை வகை வினாக்களுக்கும் கடந்தகால புள்ளியிடும் திட்டங்களின்உதவியுடனும் ஆசிரியரின் ஒத்துழைப்புடன் விடையளித்துப் பழகுதல் வேண்டும்.

ஒரு கட்டுரை வினாவில் ஒரு அங்கம் / தொகுதியின் கட்டமைப்பை வர்ணிக்க? என்று வினவப்படுமாயின் கட்டமைப்பு சார்பான இயல்புகள் மட்டுமே குறிப்பிடப்படல் வேண்டும். அதன் உற்பத்திதொழில் போன்றன இவ்வினாவுக்கு அவசியமில்லை.

ஒரு ஒட்டுண்ணியின் வாழ்க்கை வட்டத்தை வர்ணிக்க என்று கேட்கப்பட்டால் ஒரு நிலையில் ஆரம்பித்து தொடராக வாழ்க்கை வட்டத்தை எழுதி மீண்டும் ஆரம்பித்த நிலை வருவதைக் காட்டுதல் வேண்டும். உதாரணமாக **Plasmodium Vivax** இன் வாழ்க்கை வட்டத்தை வர்ணிக்க என வினவப்பட்டால் வித்திச்சிற்றுயிர் என்னும் தொற்றும் பருவத்தில்இருந்து ஆரம்பித்து தொடர் நிலைகளுக்கூடாக மீண்டும் வித்திச்சிற்றுயிர் உருவாவது வரை காட்டப்படல் வேண்டும்.

விளக்கப்படங்கள் வரையும் வினாக்களுக்கு விளக்கப்படங்களை வரைவதற்கு அதிக நேரம் ஒதுக்குதல் கூடாது. மூன்று அல்லது நான்கு நிமிடங்களில் தெளிவாகவும் அதே வேளை பகுதிகள் நன்கு தெரியக்கூடிய விதத்திலும் விளக்கப்படங்களை வரைந்து மிகத் தெளிவாகப் பகுதிகளைக் குறிக்க. பகுதிகளை திட்டமாக வேறுபடுத்த வேண்டியஇடங்களில் பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்துக. ஒருகட்டுரை வகை வினாவிற்குரிய மொத்தப்புள்ளியுடன் ஒப்பிடுகையில் படத்திற்குரிய புள்ளிகள் மிகக்குறைவாகும் என்பதை கவனத்தில் கொள்க.

வினாக்களைத் தெரிவுசெய்யும் போது நன்கு விடையளிக்கக்கூடிய வினாக்களை மட்டுமே தெரிவு செய்க. தெரிந்தெடுக்கும் வினாவிற்குரியஇலக்கத்தை தெளிவாக விடைத்தாளில் குறிக்க. ஒவ்வொரு கட்டுரை வகை வினாவிற்கும் புதிய விடைத்தாளைப் பயன்படுத்துக.

கீழே ஒரு கட்டுரை வகை வினாவிற்கு விடை எழுதும் முறையை கவனிப்போம்.

வினா: a) **Phylum Mollusca** இன் சிறப்பியல்புகளை விளக்குக?

b) **Phylum Mollusca** இன் **Classes** ஐ பெயரிட்டு அவற்றை எவ்வாறு பிரித்தறியலாம் என்பதை விளக்கவும்?

விடை a 1) மூன்றுமூலவுயிர்ப் படைகளையும் கொண்ட இருபக்கச் சமச்சீரான உடல் கொண்டவை.

2) மென்மையான துண்டுபடாத உடலமைப்பு கொண்டவை.

3) தலை, முதுகுப் புறமாக உடலகத்திணிவு வயிற்றுப்புறமாக தசை செறிந்த பாதம் கொண்டவை.

4) உடலை மூடி மென்மூடி உண்டு.

5) மென்மூடியால் சுரக்கப்பட்ட சுண்ணாம்பால் ஆன ஓடு ஒரு பகுதி, இரண்டு பகுதி, எட்டுப்பகுதிஉடையது

6) உடற் குழி உண்டு. குருதிக் குழிவு இருப்பதால் உடற்குழி ஒடுக்கம்.

7) வாய், குதம் உடைய, நிறைவான உணவுக் கால்வாய் உண்டு. வாய்ப்பகுதியில் வறுகியுண்டு.

8) திறந்த குருதிச் சுற்றோட்டம் உடையவை, உணவுக் கால் வாய்க்கு முதுகுப்புற இதயம், குருதியில் சுவாச நிறப்பொருளாக, ஈமோசயனின் உண்டு.

9) சுவாசம் சீப்புருக்களினால், பூக்களினால் / மென்மூடி அறைகளால் மேற்கொள்ளப்படுபவை.

10) கழிவகற்றல் கழி நீரகங்களின் மூலம் மேற்கொள்ளப்படும்

11) மூளையத்திரட்டு பாதத்திரட்டு நரம்புகள் கொண்ட நரம்புத் தொகுதியுண்டு.

12) பெரும்பாலும் ஈரில்ல அமைப்பு சக்கரந்தாங்கி (**Trocophore**) அல்லது **Veliger** குடம்பியை உருவாக்குபவை.

**Classes**
13) **Amphineura**
14) **Scaphopoda**
15) **Gastropoda**
16) **Pelecypoda**
17) **Cephalopoda**

பிரித்தறியும் இயல்புகள்

**Class Amphineura**

18) அகன்ற தட்டையான பாதம் கொண்டவை

19) தொடராக குறுக்காக அமைந்த எட்டு தட்டுகள் கொண்ட ஒடு உடையவை

20) ஒடுக்கப்பட்ட தலை உண்டு

**Scaphopoda**

21) தனியான கூம்புவடிவ குழாய் உருவான ஒடு இருமுனையும் திறந்தது.

22) தாழி கூம்புருவான பாதம் உடையவை.

**Gastropoda**

23) நீண்ட தட்டையான தசை பொருந்திய பாதம் உடையவை

24) சுருண்ட தனி ஓடு உடையவை

25) தெளிவான தலை, உணர் கொம்புகள், எளிய கண்கள் உண்டு.

**Class Pelecypoda/Bivalvia**

26) கலப்பை உருவான பாதம் உடையவை

27) இரண்டு ஓடுகள் கொண்டவை. நீரை உட்செலுத்தும் வெளிச்செலுத்தும் குழாய்கள் உடையவை

**Class Cephalocoda**

28) அருவிக் கோட்டுருவான உடல், தெளிவான தலை, உண்டு

29) தலையுடன் இணைந்த எட்டு அல்லது பத்துப் புயங்கள் உண்டு

30) முள்ளந்தண்டுள்ள விலங்கின் கண்ணை ஒத்த கண் கொண்டவை.

இதே போன்று மாணவர்கள் யாவரும் கட்டுரை வகை வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்துப் பயிற்சிசெய்து விலங்கியலில் உயர்வான அதிவிசேட சித்திகளைப் பெற முயற்சிக்க வேண்டும்.


## 90ம் நாள் நினைவு அஞ்சலி



செல்வன்

**இராசேந்திரம் இரவீந்திரன்**

தாய் மடியில் **11.02.1962** இறைவனடியில் **03.05.1994**

காலமெலாம் உன்நினைவு
நிலைத்திருக்கும் எம் மனதில்
நீங்காத விழி உனதோ
நீங்கி விட்டதுவோ!
ஏற்றமுடன் கல்விதனை
எங்களுக்குப் புகட்டிடவே
சீரிய சிந்தையுடன்
செயல்பட்டு நின்றாயே - இன்று
நீயின்றி நாமிங்கே
துடியாய்த் துடிக்கின்றோம் ..

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.


பட்டினசபை வீதி, மானிப்பாய். 1994-07-31 (8968)

அப்பா-அம்மா, பேரன்-பேர்த்தி, அத்தான், -அக்கா-தம்பிமார்-தங்கை, மைத்துனி, உறவினர், நண்பர்கள்.



**ஆண்டு மூன்றில் அனுப்பிவைக்கும் அஞ்சலிகள்**

**வீ. எம். கணபதிப்பிள்ளை**



தோற்றம்:
23 - 04 - 1913

மறைவு:
31 - 07 - 1991

உண்மையே பேசி உத்தமனாய்
இவ்வுலகில் உயர்வாக வாழ்ந்த
எம் தந்தையே உங்களுக்கு இந்நாளில்
எங்களிடமிருந்து ஓர் கடிதம்

எல்லையற்ற துயரோடு
எம் கண்கள் நீர் சொரிய
நாம் எழுதும் இக்கடிதம்
என்றேனும் ஓர் நாள்
நிச்சயமாய் உங்கள்
ஆன்மாவைச் சென்றடையும்

— அப்போது —

என்னருமை மகனாரும்
அன்புருவாம் மருமகனும்
என்னுடனே சேர்ந்திருக்க
துன்பமே எனக்கு இங்கில்லை என்று
உங்களது பதில் வருமோ?

- பிள்ளைகள்

சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

(8961)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் இளைஞர்

# தென்னிலங்கை தேர்தல் பிரசாரக் களம்

### சிந்தனைக்கு..

நரி பொறியைத்தான்
குறை கூறும்; தன்னையல்ல.
- வில்லியம் பிளேக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 31-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## தேர்தல் வன்முறையும் கண்காணிப்பும்

சிறிலங்காவில் தேர்தல் வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றவண்ணமே உள்ளன. வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த நாளில் இருந்து எதிர்தரப்பின்மீது தாக்குதல், கொலை, தீவைப்பு என வன் முறைச் சம்பவங்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

வன்முறைச் சம்பவங்களுக்கு யார் பொறுப்பு என்பதில் ஐ. தே. க வும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் பரஸ்பரம் குற்றம் சாட்டுகின்றபோதும் வன்முறைக்கு பிரதான காரணியாக ஐ. தே. க, இருப்பதாகவே ஊகிக்க முடிகின்றது. இதற்கு ஒரு சான்றாகப் பொலிசார் வன்முறையைத் தடுப்பதில் அதிக நாட்டம் காட்டாததையும் அவ்வாறு இல்லாது காட்ட முற்படுபவர்கள் மீது ஆளுங் கட்சி போடும் அழுத்தங்களைக் கூறலாம்.

இந்நிலையில் இம்முறை தேர்தல் சுதந்திரமாக ஜனநாயக ரீதியில் நடைபெறுமா என்ற கேள்வி பலமாகவே பலர் மத்தியில் எழுந்தது. இதற்குத் தனியாக இடம்பெற்ற / இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் வன்முறைகள் மட்டும் காரணமல்ல. கடந்த காலத்தில் தேர்தல்களின்போது நடைபெற்ற தேர்தல் வன்முறையும் இதற்குத் தூண்டுதல் அளிக்கலாம்.

கடந்த காலத் தேர்தல் வன்முறையானது, ஜனாதிபதித் தெரிவு குறித்து வழக்குத் தாக்கல் செய்யப்படும் அளவிற்குச் சென்றது. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டாலும் இத்தேர்தலின்போது வன்முறைகள் இடம்பெற்றமையும், தேர்தல் மோசடிகள் இடம்பெற்றமையும் மறுக்க முடியாத ஒன்றாகவே உள்ளன.

இந்நிலையானது சுதந்திரமான, ஜனநாயக ரீதியான தேர்தல் என்பதற்குப் பலமான ஒரு அச்சுறுத்தல் என்றே கொள்ளலாம். தேர்தலில் வன்முறையைக் கலந்தேனும் அரசியல் இலாபம் ஈட்ட முற்பட்டது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் தொடக்கப்பட்டது என்றே கொள்ளலாம். அதனை திரு. பிரேமதாசா உச்சத்திற்குக் கொண்டு சென்றார் என்பதில் ஐயத்திற்கே இடமில்லை.

## விஜயகுமாரணதுங்காவை கொன்றது யார் என தெரியும்

### மதவாச்சியில் சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு போரிற்காக அரசு நாளாந்தம் ஆறரைக்கோடி ரூபாவை செலவிடுகிறது. நாட்டு மக்கள் அனைவருக்குமே தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கக் கூட இவ்வளவு தொகை செலவு செய்யப்படவில்லை என சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

மதவாச்சியில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், கச்சதீவு பிரச்சினையை எனது தாயார் 1974-இல் சுமுகமாக தீர்த்து வைத்தார். இப்போது இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் இளைஞர் பிரச்சினைகள் எல்லாம் எங்களுக்குத் தெரியும். அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என பிரதமர் ரணில் கூறி வருகிறார். அவரின் அரசு எப்படி இளைஞர்களின் பிரச்சினையை தீர்த்து வைத்தது என்பது அனைவருக்கும் தெரியும். வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக பேச்சு நடாத்த தென் பகுதியில் இருந்து சென்றவர் விஜயகுமாரணதுங்காவே அவரையும் கொலை செய்தது யார் என்பது மக்களுக்கு தெரியும் என்றார்

## தொண்டாவுடன் கூட்டுசேர்ந்தவர்கள் தேசியதலைவர்கள் ஆகியுள்ளனர்

### இ.தொ.கா. உபதலைவர் இராஜரட்ணம்

பெரும்பான்மையின கட்சியொன்றுடன் கூட்டுச்சேர்ந்து செயலாற்றுவதன் மூலமே தமது மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வாய்ப்பு உண்டு என்பதை நன்கறிந்த பின்பே தலைவர் தொண்டமான் ஐ தே. கவுடன் கூட்டு சேர்ந்தார் ஐ. தே. க-இ தொ. கா கூட்டினால் இன்று மலையக மக்களின் 90 சதவீத பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிட்டது என இ தொ. கா உபதலைவர் எஸ். இராஜரட்ணம் தெரிவித்தார்

பன்விலவில் நடைபெற்ற பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இனவாத ரீதியில் செயலாற்றிவந்த அரசியல் தலைவர்கள் அனைவருமே தொண்டமானுடன்கூட்டுச்சேர்ந்த பின் இனவாதத்தைக் கைவிட்டு தேசியத்தலைவர்களாக பரிணமித்துள்ளனர் தமிழ் மக்களுக்கு எதிராக கண்டிக்கு யாத்திரை போனவர்களும் போர் என்றால் போர் என கூறிய தலைவர்களும் கூட தொண்டமானுடன் கூட்டு சேர்ந்த பின் தேசிய தலைவர்களாகினர். தற்போதைய ஜனாதிபதி கூட ஒரு சிலரின் தவறான வழி காட்டலினால் சிறுபான்மையினரை புண்படுத்தினார். இப்போது அவர் உண்மையை உணர்ந்துவிட்டார். தொண்டமானுடன் அவர் கூட்டு சேர்ந்துள்ளதால் அவர் தவறான பாதையில் எதிர்காலத்தில் செல்லமாட்டார் என்றார்.

## நாட்டைக் கூறு போடுவதை விட கடலில் வீழ்ந்துசாவது மேலானது

### -ஜனாதிபதி விஜேதுங்கா உரை

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வரநேரிடின் இந்த நாட்டை அவர்கள் கூறு போடத்திட்டமிட்டுள்ளனர். இந்த ஐக்கியமற்றநிலையில் வாழ்வதைவிட நாம் கடலில் வீழ்ந்து சாவது மேல் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

கேகாலையில் ஐ. தே க. பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இப்போது அவர்கள் எம்மை ஊழல் மோசடிக்காரர்கள் என குற்றம் சாட்டுகின்றனர் இரத்தக்கறை படிந்தவர்கள் என எம்மை கூறுகின்றனர். எமது கைகளில் இரத்தக்கறை இல்லை அப்படியான யுகம் 1971 இல் தான் ஆரம்பமானது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலியாகினர் ஊழலும் மோசடியும் சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் தான் இருந்தது அதனால் தான் அம்மையாரின் குடியுரிமை பறிக்கப்பட்டது எமது கட்சி தாய்மையானது நாம் எப்போதும் இன ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் விரும்புகிறோம் அவர்களோ நாட்டை இரு கூறாக ஆக்க விரும்புகின்றனர். இதை அனுமதிக்க முடியாது என்றார்.

## பொ.ஐ.மு. ஆட்சி ஏற்படின்

## உறுதியான கொள்கை சந்திரிகாவிடம் இல்லை

### -அநுரா கூறுகிறார்

(கொழும்பு)
திருமதி சந்திரிகா குமாரணதுங்கா ஒவ்வொரு கூட்டங்களிலும் தனது கொள்கைகளை மாற்றிமாற்றி பேசி வருகிறார். முன்னர் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஆதரிப்பதாக பேசிவந்த அவர், இப்போது அதை மாற்றி வேறுவிதமாக பேசி வருகிறார். இதிலிருந்து இவரிடம் உறுதியான கொள்கை இல்லை எனத் தெரிகிறதுஎன அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தெரணியகலவில் நடைபெற்ற ஐ. தே. க. தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் பொ. ஐ. மு வேலையில் லாத்தின்டாட்டம்பற்றி பேசி வருகிறது ஆனால் இப்பிரச்சினை இன்று உலகம் முழுவதும் உள்ளது. சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் 750 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் கடந்த ஐ தே. க. ஆட்சிக்காலத்தில் லட்சக்கணக்கான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

1944 முதல் இந்நாட்டில் 10 தேர்தல்கள் நடைபெற்றன இதில் ஐ.தே.க 9 தேர்தல்களில் வெற்றி பெற்றது 1956 இல் என் தந்தை பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற தேர்தலில் மட்டும் சுதந்திரக்கட்சி வெற்றி யீட்டியது என்றார்.

## பிரச்சினையை தீர்க்கும் வல்லமை ஐ. தே. கவிடம்

### களுவாஞ்சிக்குடியில் பிரதமர் ரணில்

(கொழும்பு)
தேசிய இனப்பிரச்சினையை தீர்த்துவைக்கும் வல்லமை ஐ தே. கவிற்கே உண்டு இதற்காக கடந்த 17 வருடங்களாக சமாதானக் கதவுகள் திறந்துள்ளன. அது இன்னமும் மூடப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் ஐ தே. க. பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், இனப்பிரச்சினையைத் தீர்க்க பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்குமாறு எதிர்க் கட்சியினர் கேட்டனர். நாம் சுதந்திரக் கட்சி உறுப்பினர் மங்கள முனசிங்காவை குழுவின் தலைவராக நியமித்தோம். 24மணித்தியாலத்தில் சிபாரிசுகளை முன்வைக்குமென எதிர்பார்த்தோம். 24 மாதங்களாகியும் சிபார்சு இல்லை. தெரிவுக் குழு இறுதியில் வெளியான போது அதில்ஒப்பமிடமறுத்த அஷ்ரப் இன்று அந்த சுதந்திரக்கட்சியுடன் குலாவுகிறார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஐ தே. கவி[illegible] றுதியான கொள்கையில் பெரிதும் நம்பிக்கை வைத்துள்ளனர். நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தாலே அவர்கள் அச்சமின்றி முதலீடு செய்ய முன் வருவர் சட்டத்தையும் ஒழுங்கையும் கருத்திற் கொண்டு சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்துவோம்.

இன்று தம்மிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்குமாறு கூறும் பொது ஜன ஐக்கிய முன்னணியிடம் உறுதியான கொள்கைகள் இல்லை. இதனால் வசைமாரிகளை மட்டுமே பொழிகின்றனர். கொள்கை ரீதியாக பேசுகிறார்களில்லை என்றார்.

## மாவட்ட சபைகள் மூலமே அதிகாரப் பகிர்வு

### -தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)
வடக்கையும் கிழக்கையும் இணைத்து இனரீதியில் நாட்டைப்பிரித்து நாட்டின் மூன்றில் இரண்டு பகுதி கடலையும் மூன்றில் ஒரு பகுதி நிலத்தையும் கையளிப்பதை ஐ. தே. க கொள்கையாகக் கொண்டுள்ளது- நாம் மட்டுமே இதை எதிர்த்து வருகிறோம் இந்நிலையில் அரசியல் மாற்றமே தேவை என மக்கள்

பேசிய அவர் மாகாண சபைகளை ஒழித்து மாவட்ட அமைப்பு ரீதியில் அதிகாரங்களை வழங்கி அங்குவாழும் மக்கள் தம் தேவையை நிலை நாட்டிக் கொள்ள வழிவகுக்கலாம் இதனால் நாடும்பிளவுபடாது.

1983இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எம்மோடு சேர்ந்து நின்று எதிர்த்த சுதந்திரக்கட்சி இப்போது அதை

திரு. பிரேமதாசா உச்சத்திற்குக் கொண்டு சென்றார் என்பதில் ஐயத்திற்கே இடமில்லை.

இந்நிலையில், தேர்தல் கண்காணிப்பு தொடர்பான விவகாரம் இன்று முக்கிய பிரச்சினையாகவே எழுந்துள்ளது. கடந்த சில தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்புக்குழு அழைக்கப்பட்டிருந்தும் கடந்த காலத்தில் இதனால் பெரும் திருப்தி காணப்படவில்லை என்றே கூறலாம். மக்களினால் வெளிப்படையாக அடையாளம் காணப்பட்ட தேர்தல் வன்முறை, மோசடி என்பன தொடர்பாகவே இவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையிலேயே அவர்கள் மீதான நம்பிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்தே இம்முறை சர்வதேசக் கண்காணிப்புக் குழுவுடன் அரசாங்க சார்பற்ற கண்காணிப்பு குழுக்கள் இரண்டும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு அரசாங்கத் தரப்பில் போடப்பட்ட முட்டுக்கட்டைகளையும் நீக்குவதில் அவை தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவது முதல் அறிமுகம்தான். அத்தோடு, பெருந்தொகையில் கண்காணிப்பாளரை நிறுத்துவதென்பதும் புதியதொன்றுதான்.

சிறிலங்காவில் ஜனநாயக ரீதியில், வன்முறையால் தேர்தல் பாதிக்கப்படாமல் நடைபெறுவதற்கு உதவுவது வரவேற்கத்தக்கதே. இந்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் எடுக்கும் முயற்சி வரவேற்கக் கூடியது என்றும் கூறலாம். ஆனால், இதிலும் சோழியன் குடுமி சும்மா ஆடுமா? என்ற கேள்விக்கான சந்தர்ப்பம் உண்டு.

ஏனெனில், அரச சார்பற்ற தொண்டர் படையில் அடங்கும் 10,000 பேரில் சுமார் 8,000 பேர் சர்வோதய அமைப்பைச் சேர்ந்தவர்களாகும். இந்நிலையில் ஏற்கனவே அரசியல் அபிலாசை உள்ளவர் என்று பெயர் பெற்றுவிட்ட சர்வோதயத் தலைவர் திரு. ஆரியரெட்ணா இத்தகைய பெரியளவில் அக்கறை காட்டுவது ஏன் என்பதே இக்கேள்வியாகும். ஆனால், இக்கேள்வியில் அர்த்தம் உள்ளதாயினும், தற்பொழுது இது குறித்து எதுவும் கூறிவிட முடியாது என்பதே யதார்த்த நிலை ஆகும். ஆனால், ஐ. தே. க. தேர்தல் வன்முறையில் ஈடுபடுகின்றது என்ற பரவலான குற்றச்சாட்டுக்களின் மத்தியில் சுதந்திர தேர்தல் அமைப்பானது உருவாகியுள்ளமையானது வெளிப்பார்வைக்கு நடுநிலைமையானதாகிலும் அடிப்படையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இது சாதகமானதொன்றாகும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

# பொ.ஐ.மு. ஆட்சி ஏற்படின் ஜப்பானின் நிலையே ஏற்படும்

### -முன்னாள் சபாநாயகர் எம்.எச்.முகமட்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இன்று பல கட்சிகள் சேர்ந்துள்ளன ஒருகாலத்தில் வடக்கையும் கிழக்கையும் சுதந்திர நாடாக பிரகடனம் செய்துவிட்டு தப்பியோடிய வரதராஜப் பெருமாளின் ஈ.பி.ஆர்.எல்.எப் உம் அவர்களுடன் சேர்ந்துள்ளது இவ்வாறு முன்னாள் சபாநாயகர் எம்.எச் முகமட் தெரிவித்தார்.

பொரளையில் நடைபெற்ற ஐ.தே.க பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன மதவாத இனவாத கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் சேர்ந்துள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறு கொள்கைகளை கொண்டுள்ளன. ஜப்பானிலும் இவ்வாறான கட்சியொன்று அண்மையில் கூட்டரசாங்கம் ஒன்றை அமைத்தது. அங்கு கடந்த 8 மாதங்களில் 4பிரதமர்கள் வந்துவிட்டனர் இந்நிலையே இங்கு ஏறபடலாம் உலகசாதனையாகியும் விடும்.

சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் இராணுவத்தை கொண்டு தீர்க்கப்பட்டன இன்று எம்மை பெரும்பாலான பத்திரிகைகள் விமர்சிக்கின்றன. குறைகூறுகின்றன. நாம் அவற்றை தடைசெய்யவில்லை என்றார் இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் பேராசிரியர் கருணசேன கொடிதுவக்கு, ரட்ணசிறி ராஜபக்ச, ஒஸி அபயகுணசேகர, ரி.எம் சங்கதாஸ ஆகியோரும் உரையாற்றினர்.

# ஒன்றுபட்டு வாக்களிப்பின் கொழும்பில் 3 தமிழ் பிரதிநிதிகள் தெரிவாவர்

### வெள்ளவத்தையில் குமார் பொன்னம்பலம்

கொழும்பு மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் கடந்த காலங்களில் இந்நாட்டில் ஆட்சி செய்துவந்த பேரினவாதக் கட்சிகளுக்கே வாக்களித்து வந்துள்ளனர். இவர்கள் வாக்காளர்களாக இருந்தனரே தவிர வேட்பாளராக -வாக்கு கேட்பவர்களாக இருக்கவில்லை. இந்நிலையினால் தான் பேரினவாதிகள் தமிழினத்தை செடி கொடி என்றுசிறுமைப்படுத்திப்பேசும் அளவுக்கு வந்துள்ளனர் என குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வெள்ளவத்தையில் நடைபெற்ற சுயேட்சைக்குழு தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு பேசியஅவர், தமிழினத்தின் ஒன்றுபட்ட பலத்தை காட்டவே இத்தேர்தலில் சுயேட்சைக்குழுவைஅமைத்து நாம் போட்டியிடுகிறோம். இது தனித்துவமான தமிழ் குழுவாகும் தமிழ் மக்கள் இத்தேர்தலில் ஒன்றுபட்டு வாக்களித்தால் கொழும்பு மாவட்டத்திலிருந்து மூன்று தமிழ் பிரதிநிதிகளை இம்முறை பாராளுமன்றம் அனுப்ப முடியும்.

தமிழினம் இந்த நாட்டில் நடத்தும்உரிமைப் போராட்டம் உலகறிந்த விடயமாகிவிட்டது. இதையாரும் மறைக்க முயன்றால் அது தன்னைத்தானே ஏமாற்றுவதாக அமைந்துவிடும். தமிழினத்தின் தனித்துவத்தையும் சுய மரியாதையையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் ஒரு தேர்தலாகவே இது அமைகிறது என்றார்.

## எதிர்காலத்தில் நாட்டில் இனக்கலகம்ஏற்படக்கூடாது

எக்காரணம்கொண்டும் இனிமேல் இந்நாட்டில் இனக்கலவரம் ஏற்படக் கூடாது. அதற்கு எவருமே இடம் கொடுககக் கூடாது என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பதுளை வேட்பாளர் வில்பிரட் ரட்ணாயக்கா தெரிவித்தார்.

பதுளையில் முன்னணியின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், சிங்கள மக்கள் தோட்டப்புறங்களிலும், தமிழர்கள் நகரங்களிலும் முன்னர் அச்சமின்றி நடமாடினர். அரசியல் ரீதியாக கோஷங்கள் எழுப்பப்பட்டாலும் மக்களிடையே பேதம் எழவில்லை. ஆனால் சுதந்திரம் பெற்ற பின்னர் இந் நாட்டில் ஆட்சி செலுத்திய ஐ. தே. க. செயற்படுத்திய வகுப்புவாத நடவடிக்கைகள் தமிழ்-சிங்கள மக்களிடையே பேதத்தை வளரச் செய்தது.

இந்நிலையில் அரசியல் மாற்றமே தேவை என மக்கள் விடுதலைமுன்னணித்தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் ...ந்து நின்று எதிர்த்த சுதந்திரக்கட்சி இப்போது அதை கைவிட்டு விட்டது நாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கு கிழக்கில் போரிட்டு மரணமான படையினருக்கு பத்து லட்சம் ருபா வழங்குவோம் என்றார்

# ஆட்சியில்சுதந்திரகட்சியல்ல பொ.ஐ.முன்னணியேவரும்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்

(கொழும்பு)

இன்று நாடுபூராவும் சந்திரிகா- அஷ்ரப் ஒப்பந்தம் பற்றி பேசப்படுகிறது. இவ்வாறான ஒப்பந்தம் இதுவரை இலங்கை வரலாற்றில் ஏற்பட்டதில்லை. ஐ. தே. க. எங்கள் தனித்துவத்தை ஏற்றிருப்பின் விஜேதுங்கா- அஷ்ரப் என ஒப்பந்தம் வந்திருக்கும் இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், ஐ. தே. க எம் தனித்துவத்தை ஏற்கவில்லை. நாடுமுழுவதும் ஒரு புரட்சி நடக்கவுள்ளது. 17 வருடகால ஆட்சிக்கு அஸ்தமனம் ஏற்படும். அமையவிருக்கும் அரசை அமைப்பவர்கள் சிறிலங்காசுதந்திரகட்சியல்ல. முஸ்லிம் காங்கிரசையும் உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணியாகும் முஸ்லிம் காங்கிரசிற்கு திகாமடுல்ல மாவட்டத்தில் 3 எம். பிகள் கிடைக்கக்கூடிய ஒரே சந்தர்ப்பம் இதுவாகும் என்றார்

# இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டே தீருவோம்

### அக்மீமனவில் ரிச்சர்ட் பத்திரன

(கொழும்பு)

இதுகாலவரை தீர்த்து வைக்கப்படாத இனப்பிரச்சினைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் நிரந்தரத் தீர்வை கண்டே தீரும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் காலி மாவட்ட முதன்மை வேட்பாளர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

அக்மீமனவில் இடம்பெற்ற முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர் தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் விடுதலை முன்னணி முன்னதாக எமது முன்னணியில் சேர்ந்து உழைப்பதாக உறுதியளித்தனர் பின்னர் எமது கொள்கைகளை ஏற்க முடியாது என்றனர். இப்போது எமது கொள்கைகள் சரியில்லாததினாலேயே பிரிந்து விட்டதாக கூறித்திரிகின்றனர்.

எமது கொள்கைகள் சரியில்லை எனக் கூறும் காரணம் வெறும் பிதற்றல். வேட்பாளர் எண்ணிக்கைதொடர்பாகஏற்பட்ட பிணக்குகளே அவர்கள் எம்மிடமிருந்து பிரிந்து செல்லக்காரணம். இதைக் கூறாமல் எமது கொள்கைகள் சரியில்லை என அவர் கூறுவது பொருத்தமற்றது. இம்முறை இடம் பெறும் பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணியின் 150 உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வர் என்பது உறுதி என்றார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவுநாடா வெளியீடு

நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சிவாகம ஞான பாஸ்கர சிவஸ்ரீ கா. மகாதேவக்குருக்களும் வண பிதா. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளும் மங்களவிளக்கேற்றுவார்கள. இசைக் கலைமணி செல்வி இ. விஜயலட்சுமியின் கடவுள் வாழ்த்துடன் வரவேற்புரையை இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் நிகழ்த்துவார். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள ஆசியுரை வழங்குவார்.

வாழத்துரையை கானகதா வாரிதி சிவ. வை. நித்தியானந்த சர்மா, செல்வி புஸ்பா செல்வநாயகம். அருட்கவி சி] வினாசித்தம்பி ஆகியோர் ஆற்றுவர். கலாநிதி சபா. ஜெயராசா வெளியீட்டுரை நிகழ்த்துவார். திரு. க. சோமசேகரம் அவர்களால் கலைஞர்களுக்கான கௌரவிப்பு நடைபெறும். அதனைத் தொடர்ந்து பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீடு இடம் பெறும். நாதஸ்வரச் சக்கரவர்த்தி என்.கே. பத்மநாதன் அவர்கள் ஒலிநாடாவை வெளியிட திரு. நா. அப்புலிங்கம் அவர்கள் முதற்பிரதியை பெற்றுக்கொள்வார்- சிறப்புப் பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து பாடல் ஒலிப்பதிவு நாடாவைப் பற்றிய மதிப்பீட்டுரைகளை கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை, இயலிசை வாரிதி ந- வீரமணிஐயர், பேராசிரியர் கா- சிவத்தம்பி ஆகியோர் ஆற்றுவர்-

கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய இந்தப் பாடல்களை கண்ணனின் இசையில் வர்ணராமேஸ்வரன் பாடியுள்ளார்- இவ் விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக நல்லை முருகன் பாடல்கள் இசையரங்கு இடம்பெறும்-

## வெளிச்சம் 27- வது இதழ் நாளை வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழ்- ஆடி மாத இதழ்- நாளை திங்கட்கிழமை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய கருத்துரையும் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும், ஆதிலட்சுமி சிவகுமார், கோளாவிலூர் கிங்ஸ்லி ஆகியோரின் சிறுகதைகளும் புதுவை இரத்தினதுரை, செ. பொ. சிவனேசு, நாக- சிவசிதம்பரம், இத்தாவில் க. சிவராசா, பொன்னிலா, யதார்த்தன் ஆகியோரின் கவிதைகளும் இடம் பெறுகின்றன. இவற்றுடன் கவிஞர் முருகையனின் நேர்காணல் மற்றும் செ. கிருஷ்ணராசா, பொன்னிலா, இளையவன் ஆகியோரின் கட்டுரைகளும் தமிழ்க்கவியின் உணர்வுச் சித்திரமொன்றும் 'வாழ்வோடிணைந்த கலை' தெருக்கூத்து பற்றிய கட்டுரையின் மறுபிரசுரமும் உள்ளன.

இந்த இதழ் வெளிச்சத்தின் இருபத்தி ஏழாவது இதழாகும்.

### இழப்பீட்டு

காக அரசு ஒதுக்கீடு செய்த நிதி போதுமானதாக இருக்கவில்லை இதைத் தொடர்ந்து யாழ் செயலகம் குறை நிரப்புச் செய்யும் பொருட்டு மேலதிக நிதி கோரியிருந்தது. இக்கோரிக்கையும் அரசினால் நிராகரிக்கப்பட்டுள்ளது-

### நரோமா

துறைமுகத்தில் வைத்து கடுமையான கெடுபிடிக்கு உள்ளாக்கப்பட்டனர், அனுமதி பெறாமல் எடுத்து வரப்பட்ட

### வடபகுதி

வடபகுதிக்கான பொருள்கள் ஏற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கையில் நடைபெறும் அரசியல் கொந்தளிப்பாலும் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்டு வரும் கெடுபிடி நடவடிக்கைகளினாலும் வடபகுதிக்கான கப்பல் சேவைகள் சமீப நாட்களாக தாமதமடைந்திருந்தன.

இதே சமயம் றுகுணு கப்பலில யூரியா உரம் ஏற்றப்பட்டது சம்பந்தமானவிசாரணை முடிவடைந்திருப்பதை அடுத்தே இக் கப்பல் நாளை

# இந்திய உளவு பிரிவின் உதவியுடன் சோமவன்சா செயற்பட்டுவருகிறார்

(லண்டன்)

தேசிய மீட்பு முன்னணியின் நடவடிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் நீடிப்பதற்கே வழி செய்யும் என்று சர்வதேச நடவடிக்கைக் குழுவும் ஜே. வி. பியின் லண்டன் குழுவும் கூட்டாக தெரிவித்துள்ளன

இது தொடர்பாக இவர்கள் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், தேசிய மீட்பு முன்னணி மேற்கொள்ளும் முயற்சியானது ஜே. வி. பியை முற்றாக அழிக்கும் நோக்கம் கொண்டது என்றும், இந்திய புலனாய்வுப் பிரிவான 'றோவின்' ஒத்துழைப்புடன் சோமவன்ச அமரசிங்க செயற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் சோபிதா என்ற பெயரிலான இந்தியக் கடவுச்சீட்டுடன் சோமவன்ச அமரசிங்க கடந்த 6-ம் திகதி கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கிய அவர் ஜே.வி.பி. யின் செயலாளரென தம்மைப்

## லண்டன் ஜே. வி. பி. கிளைகண்டனம்

பிரகடனப்படுத்தியுள்ளது அதிர்ச்சி ஊட்டுவதாகவுள்ளது ஆரிய புலேகொடவுடன் இணைந்து தேசிய மீட்பு முன்னணி என்ற பெயரில் தேர்தல் களத்தில் ஈடுபட்டுள்ளது இது மிகவும் மோசடியானது, கட்சிக்குள் இருக்கும் எதிரிகள் கட்சியை தவறான பாதையில் இட்டுச்செல்ல முனைகின்றனர் கட்சியின் உறுப்பினர்கள் இந்த மோசடியினால் ஏமாற்றப்பட்டுவிடக் கூடாது எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வவுனியா வீதிகளில் தேர்தலன்றும் சோதனை

(வவுனியா)

வன்னி மாவட்ட பொதுத் தேர்தலில் வாக்களிக்கச் செல்பவர்கள் சிறிலங்காப்படையினரால் வழங்கப்பட்ட வதிவிட அனுமதியை தம்முடன் எடுத்துச் செல்லுமாறுகோரப் பட்டுள்ளனர்.

வீதிகளிலும், வாகனங்களிலும் படையினர் தேர்தலன்று சோதனை நடத்தும் போது இந்த அனுமதி அவர்களுக்கு உதவியாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

### உற்சவம்

கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று தொடக்கம் பத்து தினங்கள் நடைபெறும்

### விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் வீரவேங்கை வினோத் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி புலோப்பளை மத்தி, பளையில் பிரதாபன் விளையாட்டரங்கில் இன்று பிற்பகல் 2.30மணியளவில் நடைபெறும்.

★

(கொழும்புத்துறை)

தொல்புரம் சக்தி குழந்தைகள் நாளாந்தக் கவனிப்பு நிலையத்தின் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறும். (24)

### கண்காட்சிநீடிப்பு

(தென்மராட்சி)

மாமனிதர் கலைஞானி அவர்களின் தொல் பொருட்களின் கண்காட்சி கடந்த 28ஆம் திகதி முதல் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்று வருகின்றது

மாணவர்கள், பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று மாலை 5 மணிவரை

### இந்தியாவின்

ஜனாதிபதி ஜே- ஆர்- ஜெயவர்த்தனா செய்த இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்றதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இவ் ஒப்பந்தம் கையெழுத்தான போது நாடு முழுவதிலும் சுற்றித்திரிந்து எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த எதிர்கட்சியினர் வன்செயல்களுக்கு] தூபமிட்டதாகவும், இதனால் சர்வதேச அரங்கில் இந்நாட்டின் மதிப்பு வெகுவாக பாதிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்- இந்திய இராணுவத்தின் பிரசன்னத்திற்கு எதிராக மிகவும் தந்திரமான முறையில் இவர்கள் செயற்பட்டனர்- இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்புவதற்கு அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா அவசரப்பட்டிருக்காவிட்டால் அவரும், லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரட்ணா, டென்சில் கொப்பேகடுவ உட்பட இன்னும் பலரும் இப்போதும் வாழ்ந்திருக்கக் கூடும் எனவும் தெரிவித்தார்-

### முப்படை

படைகளைச் சேர்ந்த யார் யார் கலந்து கொண்டார்கள் என்பது தொடர்பான மேலதிகமான தகவல்கள் கிடைக்கவில்லை.

பொதுத்தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல்செய்ததினத்

### மட்டக்களப்பு

சுமார் 2,60,000 வாக்காளர்கள் வாழும் மட்டக்களப்பு பகுதியில், இருபது சதவிகிதம் மட்டுமே அரசட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ளனர்,

மட்டக்களப்பில் அமைதியை திரும்பச் செய்கிறோம் என்ற பெயரில் இராணுவம் மேற்கொள்ளும் கொடுமையை கூறவே முடியாது ஒவ்வொரு தெருவிலும் சோதனைச் சாவடிகள் ,திடீர் சுற்றிவளைப்புகள். இவைகள் மிகச் சாதாரணமாகவே உள்ளது.

15வயதுக்கு மேற்பட்டவராக மட்டக்களப்பில் வாழும் தமிழ்க் குடிமகன் ஒருவர் சந்திக்கும் இடர்ப்பாடுகள் ஏராளம், குறிப்பாக 15 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் விசேட அடையாள அட்டை பெறவேண்டும் விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களுக்கு உரம் போடுவதற்கு கூட இராணுவத்தின் அனுமதியும் மேற்பார்வையும் பெற வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகிய இருவரைத் தவிர ஏனைய அனைவரையும் உடல் ரீதியாகப்பரிசோதனைக்கு உட்படுத்துவோம் என்று மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனா கூறியுள்ளார் இதிலிரு

## கவிஞன் வாழும் காலத்தில் மதிக்கப்பட வேண்டும்

### வைகை வெளியீட்டு விழாவில் மகேந்திரன்

(யாழ்ப்பாணம்)

கவிஞன் வாழும் காலத்தில் பாராட்டப்படுவதுமில்லை. மதிக்கப்படுவதுமில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

வை. க. தவமணிதாசன் எழுதிய வைகை கவிதைநூல் வெளியீட்டு விழாவில் சுடர் இ. மகேந்திரன் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது, இக்கவிஞர் இந்த நூலில் சமகாலத்தை நன்கு பதிவு செய்துள்ளார் என்றார்.

கோ. சி. வேலாயுதம் அங்கு பேசும்போது, யதார்த்த சிந்தனையோடு ஆக்க இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். இதுதான் தேவை என்றார்.

சோ. பத்மநாதன் அங்கு ஆய்வுரை நிகழ்த்தும்போது, இக்கவிஞர் விஞ்ஞானக் கருத்துக்களையும் சமகாலத்தோடு பொருத்திப் பார்த்திருக்கின்றார் என்றார். (தி)

## அதிகாரிகள் கட்டளை ஏற்க பொலிஸ் அதிகாரி மறுப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளின் உத்தரவை ஏற்க மறுத்த பொலிஸ் பொறுப்பதிகாரி தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்-

தேர்தல் நடவடிக்கைக்காக பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை அமைச்சர் காமினி லொக்குகேயிற்கு வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகவும் இதனை ஏற்க மறுத்தே இவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

3 ஆம் ஆண்டு நினைவாக



பிறப்பு :
1976 - 07 - 04

வீரச்சாவு :
1991 - 07 - 31

வீரவேங்கை அன்பு
(யாக்கோப் அல்டீன் ஜோர்ஜ்)

அன்புவே அமலன் உன்னை அழைத்த
செய்தியை எம் இதயம் இன்றும் ஏற்கவில்லை
தூங்காத கண்களில் துளிர்க்கும்
நீர்த்துளிகள் ஆங்காங்கே காண்கின்றோம்.

பிரிவால் வாடி நிற்கும்,
- குடும்பத்தினர்

(8984)

இக்கோரிக்கையும் அரசினால் நிராகரிக்கப்பட்டுள்ளது-

## நரேமா

துறைமுகத்தில் வைத்து கடுமையான கெடுபிடிக்கு உள்ளாக்கப்பட்டனர். அனுமதி பெறாமல் எடுத்து வரப்பட்ட பல பொருள்கள் பயணிகளிடமிருந்து கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

(தி, க)

கப்பல் சேவைகள் சமீப நாட்களாக தாமதமடைந்திருந்தன.

இதே சமயம் றுகுணு கப்பலில் யூரியா உரம் ஏற்றப்பட்டது சம்பந்தமானவிசாரணை முடிவடைந்திருப்பதை அடுத்தே இக் கப்பல் நாளை யாழ் நோக்கிப் புறப்பட்டு வர ஆயத்தம் செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அவர்களின் தொல் பொருட்களின் கண்காட்சி கடந்த 28ஆம் திகதி முதல் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்று வருகின்றது

மாணவர்கள், பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று மாலை 5 மணிவரையும் இக் கண்காட்சி இடம் பெறவுள்ளது. (86)

## வவுனியா

சார் தேடுதல் நடத்தினர்.

சி. முத்துபாண்டியன் (42) என்ற தமிழரும் மற்றுமொரு சிங்களப் பொதுமகனுமே காயமடைந்த பொதுமக்களாவர். இவர்கள் இருவரும் ஐ. தே. க தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக வந்திருந்தவர்கள் என்றும் குருநாகலையை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## தேர்தல்

தொலைபேசி மூலம் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின்போதே அரச அதிபர் தமது நிலைப்பாடு குறித்து தேர்தல் ஆணையாளரிடம் எடுத்து விளக்கியுள்ளார் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன

## முப்படை

படைகளைச் சேர்ந்த யார் யார் கலந்து கொண்டார்கள் என்பது தொடர்பான மேலதிகமான தகவல்கள் கிடைக்கவில்லை.

பொதுத்தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல்செய்ததினத்தன்று தொடக்கம் நடைபெற்று வரும் வன்செயல் அச்சுறுத்தல்களும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட தவறிய சிலநடவடிக்கை தொடர்பாகவும் இச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் மேலும் இவ்வாறு நடைபெறுமானால் அதுநாட்டில் பாரிய பிரச்சினையை உருவாக்கும் என்றும் எனவே சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் பாரபட்சமற்ற ரீதியில் எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது எனத் தெரிய வருகின்றது-

இதேவேளை வடக்குகிழக்கு பகுதியில் திடீர் யுத்தம் ஒன்றை மேற்கொண்டு தேர்தலில் அரசியல்இலாபம் பெறுவதற்கு அரசாங்கம் முன்வரக் கூடும் என்றும் இது குறித்து மிகவும்அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் மேலும்தெரிய வருகின்றது; (நி)

அதிபர் ஆகிய இருவரைத் தவிர ஏனைய அனைவரையும் உடல் ரீதியாகப்பரிசோதனைக்கு உட்படுத்துவோம் என்று மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனா கூறியுள்ளார் இதிலிருந்து இராணுவம் மேற்கொள்ளும் கெடுபிடிகளை உணர்ந்து கொள்ள முடியும்

தேர்தல் நடவடிக்கைகளைக் குழப்புவதற்காக சுமார் 75 போராளிகளை மட்டக்களப்பிற்கு விடுதலைப் புலிகள் அனுப்பி இருப்பதாக இராணுவம் கருதுகிறது

## தேர்தல் முடிவ

ததும் சமாதானக் கமிட்டியாக செயற்படுவதற்கான அறிவுறுத்தல் சந்திரிகா குமாரணதுங்கவினால் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல் முடிவடைந்ததும் நாட்டில் ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்யுமாறு நான் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளேன். ஊரடங்கு நடைமுறைப்படுத்தின் வன்முறைகளை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றும் கிங்ஸ்லி விக்கிரமரட்ன கூறினார்.


TRO

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
# சமூக சேவகர்கள் தேவை

எமது செயற்திட்டங்களில் பங்குகொண்டு எம்முடன் இணைந்து செயற்பட தொண்டர் அடிப்படையில் சமூக சேவகர்கள் பகுதிநேர / முழுநேர அங்கத்தவர்கள் தேவைப்படுகின்றனர்.

சமூகசேவையில் நாட்டமுள்ள தொண்டர்கள் எமது நடுவப்பணியகத்தில் அல்லது அருகாமையிலுள்ள எமது பிரிவுச் செயலகங்களில் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**பிரிவுச் செயலகங்கள்:**

1. காங்கேசன்துறைவீதி, சுன்னாகம்.
2. மந்திகை, பருத்தித்துறை.
3. நாகர்கோயில்.
4. கண்டிவீதி, மீசாலை.
5. கண்டிவீதி, பளை.
6. பண்டிதர்குடியிருப்பு, கெற்பேலி.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
**நடுவப்பணியகம்,**
**83/2, காங்கேசன்துறை சாலை,**
**கொக்குவில்.**

(சி-10014)



இன்று 31 - 07 - 94 மாலை 6 - 30

கூத்துப் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி

# திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# "கூத்தரங்கு"

★ ஒரே மேடையில் 3 கூத்துக்கள் ★

மன்ற அரங்கு ★ புனிதவதி மன்ற அரங்கு
★ புனித கிறிஸ்தோப்பர்
★ புனித பத்திரிசியார்

★ முக்கோண போட்டி நிகழ்வு ★

★ ஆர்வலர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு ★

★ ஆசனப்பதிவு இடம்பெறும்

(சி-10013)


அன்புவே அமலன் உன்னை அழைத்த
செய்தியை எம் இதயம் இன்றும் ஏற்கவில்லை
தூங்காத கண்களில் துளிர்க்கும்
நீர்த்துளிகள் ஆங்காங்கே காண்கின்றோம்.

பிரிவால் வாடி நிற்கும்,
- குடும்பத்தினர்

(8984)

# மரண அறிவித்தல்கள்

## ஸ்ரீபன் மகேந்திரா போல்
## (S. M. PAUL)

திரு. ஸ்ரீபன் மகேந்திரா போல் 28-07-94 வியாழக்கிழமை காலமானார். இவர் திரு. திருமதி எஸ். ஏ போல், மேரி தெரேசா அவர்களின் மகனும், திருமதி கொன்சி பெனடிக்ராவின் கணவரும், தயாளினி, பிரதாப், தர்மினி ஆகியோரின் தந்தையும் தெய்வேந்திரா, குலேந்திரா, பாலேந்திரா, அருட் திரு. ஜீவா போல் அ. ம. தி. றெஜினோல்ட், ஜோய், கஸ்ரன், றஞ்சித், அருட் செல்வன் எமில் போல் ஆகியோரின் சகோதரனுமாவார்.

இவரது இறுதிச் சடங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை (31-07-94) மாலை 3 மணிக்கு யாழ். மரியன்னைப் பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியோடு நடைபெறும்.

இறைவனில் என்றும் இளைப்பாறுவாராக

தகவல்:
திரு. எஸ். ஏ. போல்
51/1 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(8980)

## திருமதி இராசன் குருமணி

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்தவரும், சேமமடுவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி இராசன் குருமணி காலமானார். இவர் காலஞ்சென்ற இராசனின் அன்பு மனைவியும், சிவாஜினி, சுந்தரேசன் ஆகியோரின் தாயாரும், திரு. திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும் திரு. திருமதி சுந்தரம்பிள்ளை இலட்சுமி தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அச்சுவேலி தோப்பு நிதி பவனத்தில் நடைபெற்று இன்று மாலை 3.30 மணிக்கு தகனக் கிரியைகள் தோப்பு மயானத்தில் நடைபெறும்.

31-7-1994

தகவல்:-
திருமதி பொன்னம்மா
(தாயார்)

(8985)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது